148

148

KAVERI VACHAGAM

BOOK IV

(Based on the New Syllabus, 1939.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

VIDWAN M. RAJAMANIKKAM, B.O.L.
Tamil Pandit, Muthialpet High School, Madras.

908

K. R. VARDON & CO.
TANJORE

காவேரி வாசகம்

நான்காம் புத்தகம்

(Based on the New Syllabus, 1939)

494.81186

ஆசிரியர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.,

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

908

கே. ஆர். வார்டன் அண்ட் கம்பெனி,

தஞ்சாவூர்

1941

[விலை அணா 6

பதிப்புரிமை]

P31/9

Printed at the Jupiter Press, Madras.

908
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

முகவுரை

காவேரி வாசகம் என்னும் பெயருடைய இத் தமிழ்ப்பாட வரிசை, கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாட இயல் (Syllabus) படி எழுதப்பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது. மாணவர் பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவினையும், பொது அறிவினையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட இயலிற் கண்டவாறே புதிய சொற்கள் பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு நூலிலும் பிள்ளைகளது தகுதிக்கேற்றபடி கதை, கைத்தொழில், பயிர்த்தொழில், சுகாதாரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியல் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே எளிய முறையில் அமைந்த பழைய பாடல்களாகிய கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், பள்ளு, குறம் முதலியனவும் புதிய பாடல்களும் நடிப்புக்குரிய பாடல்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் கேள்விகள், பயிற்சி, இலக்கணம் என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. மௌன வாசிப்பின் அவசியம் கதைப் பாடங்கள் மூலமாகவும் படப்பயிற்சிகள் மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம், கட்டுரை முதலியன எழுதுதற்குத் தக்கவாறு சில பாடங்களும், மாதிரிக் கடிதங்களும் எழுதப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், காவேரி வாசக வரிசை—செவிலித்தாய் போல் மக்களுக்குத் தன் நன்னீரை அளித்துக் காக்கும் புகழ் மிக்க காவேரி ஆறுபோல்—தமிழ் மாணவர்க்கு அறிவினை ஊட்டும் செவிலித் தாயாக அமைவுறும் எனல் மிகையாகாது.

மா. இராசமாணிக்கம்

ஆசிரியர்க்கு :

1. பாட இயலிலும், தமிழ்ப்பாட நூலிலும் கண்டுள்ள வகுப்புக்கேற்ற நிறுத்தக் குறிகளைப் பற்றிய அறிவைத் தெளிவுற ஊட்டி, அவை இடவேண்டும் இடங்களை நன்கு உணர்த்திப் பழக்குதல் இன்றியமையாதது. பொருள் விளங்கும்படி வாசித்தற்கு நிறுத்தக் குறிகள் இன்றியமையாதவை என்பது பிள்ளைகள் உள்ளத்தில் நன்கு பதியச் செய்தல் நல்லது.

2. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தரப்பட்டுள்ள பயிற்சியில் நன்கு பழகும்படி மாணவரை ஊக்குதல் நற்பயிற்சியாகும். பயிற்சிகளிற் பழகும் மாணவர் அறிவு விரைவில் நிறைவுறும் என்பது கல்வி அறிஞர் கருத்தாகும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளைப் பழக்குதல் சிறப்புடையது.

3. **குறிப்புப் புத்தகம்**—அவசியமான பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக்கொள்ளும் **நோட்டுப் புத்தகம்** — என்பவற்றின் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு விளக்கி, அவற்றை வைத்துக் கொண்டு பழகுமாறு செய்தல் ஆசிரியர் அருங்கடனாகும்.

4. பிள்ளைகளைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்குதல், அவற்றைப்பற்றிக் கட்டுரை வரையச் செய்தல், பத்திரிகைச் செய்திகளை நாள்தோறும் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல் முதலியன பிள்ளைகள் முன்னேற்றத்திற்கு ஏற்றவையாகும்.

5. தோட்ட வேலை, அட்டை வேலை, மூங்கில், பிரம்பு இவற்றைக் கொண்டு செய்யும் கைத்தொழில், நூல் நூற்றல், தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றில் பிள்ளைகள் பெறும்

அநுபவத்தை அன்றாடம் தத்தம் குறிப்புப் புத்தகத்தில் எழுதச் செய்தல் நல்ல முறையாகும்.

6. பாட நூலில் வரும் உரையாடல்களை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக உருவில் எழுதச் செய்தல், நாடக உருவில் உள்ளவற்றைக் கதை வடிவில் எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து தம் சரித்திரம் கூறுதல் போலவும்-அதனைப் பிறர் கூறுதல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் முதலியன மாணவர்க்குப் பேசும் திறனையும் எழுதும் திறமையையும் விரைவில் முன்னேறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

7. இன்ன இடங்களில் க, ச, த, ப மிகும் என்பதைப் பிள்ளைகளுக்கு உதாரணத்துடன் அறிவித்து, இந்த அறிவைப் பாடங்கள் மூலமாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் நல்ல தொண்டாகும்.

8. ர, ற; ல, ள; ந, ண, ன — இவற்றின் வேறுபாடு விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதலும், பொருளை அறிந்து கொள்ளுமாறு பழக்குதலும் மாணவரது தமிழ் அறிவிற்கு இன்றியமையாத அடிப்படையாகும்.

9. பாட்டுகளைச் சீர் பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் மிகவும் நல்லது.

10. சுகாதாரம் முதலிய சிறப்புடைய செய்திகளின் விவரங்களைப் படங்கள், காட்சிகள், கதைகள் இவற்றின் மூலமாக நன்கு விளக்கி, அவற்றில் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் மாண்புடையதாகும்.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	என் உறுதியான எண்ணம்	1
2.	எனது குறிப்புப் புத்தகம்	4
3.	பதினெட்டாம் பெருக்கு	7
4.	காட்சிச் சாலை	10
5.	ஆறு (பாட்டு)	14
6.	கதைப் படம்	17
7.	ஐவர் அவை	19
8.	மௌன வாசிப்பு—I	22
9.	மௌன வாசிப்பு—II	26
10.	முயன்றால் முடியாதது உண்டா? (பாட்டு)...	29
11.	நெற் பயிர்	31
12.	வீட்டு வேலை	35
13.	கோவூர் கிழார்	38
14.	கைத்தொழில் படங்கள்	42
15.	தமிழ்த்தாய் (பாட்டு)	44
16.	வைத்திய சாலை	49
17.	கட்டுரை எழுதுதல்	53
18.	பொய் சொன்ன பொன்னப்பன் ...	55
19.	கடிதங்கள்	58
20.	நம் நாட்டுப் பெரியார் (பாட்டு) ...	62

21.	மதுரை மாநகரம்	64
22.	கதைப் படம்	69
23.	எங்கள் உல்லாஸப் பிரயாணம் ...	71
24.	செய்யுளும் உரை நடையும் ...	74
25.	பழமொழிகள்	77
26.	சாரணர் இயக்கம்	79
27.	பத்திரிகைச் செய்திகள்	82
28.	இராஜராஜ சோழன்	85
29.	இளங்கோ அடிகள் (நாடகம்) ...	88
30.	செய்யுள் பாடம்	93
	I. (1) வாக்குண்டாம்	93
	(2) நல்வழி	94
	(3) விவேக சிந்தாமணி	95
	II. சதகச் செய்யுள்	97
	III. பலசுவைப் பாடல்கள்	99

படப் பயிற்சி 1

நாயும் குழந்தையும்

படம் பார்த்துக் கதை சொல்.



படப் பயிற்சி 2

நாயும் அல்லி மலரும்

படம் பார்த்துக் கதை சொல்.




10
11

படப் பயிற்சி 3

நெற் பயிர்

படம் பார்த்து விஷயம் சொல் .



காவேரி வாசகம்

நான்காம் புத்தகம்

1. என் உறுதியான எண்ணம்

புதிய சொற்கள் :—எனக்கென்று—வைத்துக் கொள்கிறேன்—தூய்மையாக—இந்திய—நாட்டவர் — மொழி—வல்லவர்—துறவி—அமெரிக்கா — மீண்டவர் — பிரசங்கங்கள் — பெருமை — உறுதிப் படுகிறது.

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் **கண்ணன்**. என் பெற்றோர் எனக்கென்று ஓர் அறையை

விட்டிருக்கின்றனர். அந்த அறையில் என் மேஜை, நாற்காலி, சிறிய பீரோ, புத்தகங்கள் இவை இருக்கின்றன.

நான் எப்பொழுதும் என் அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறேன். என் பெற்றோர் என் அறையை நாளும் பார்க்க வருவர்; அது தூய்மையாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவர்.

என் அறையில் சுவாமி விவேகானந்தர் படம் இருக்கிறது. என் தகப்பனர் அதனை எனக்குத் தந்தார். அவர், "தம்பீ, இவர் நமது இந்திய நாட்டவர்; ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் வல்லவர்; பெரிய துறவி. இவர் அமெரிக்கா முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று மீண்டவர்; அந்த நாடுகளில் பலவகைப் பிரசங்கங்களைச் செய்து நமது நாட்டுக்கே பெருமை உண்டாக்கினவர். இவர் பெயர் சுவாமி விவேகானந்தர் என்பது. நீ இந்த மஹானைத் தினமும் எழுந்தவுடன் தரிசி; 'நான் இவரைப் போலப் பெரிய மனிதன் ஆக வேண்டும்' என்று எண்ணு. நீ நல்ல நிலையை அடைவாய்" என்றார்.

நான் அன்று முதல் இப்பெரியார் படத்தைப் பூசை செய்து வருகிறேன்; காலையில் எழுந்தவுடன் அதனை வணங்குகிறேன். 'நான் இவரைப் போலப் புகழ் பெற வேண்டும்' என்று உறுதி கொள்கிறேன். நாள் ஆக ஆக, இந்த எண்ணம் எனக்குள் உறுதிப்படுகிறது.

நான் பெரியவன் ஆனதும் இவருடைய பிரசங்கங்களைப் படிப்பேன்; இவரைப் பற்றிய செய்திகளை அடிக்கடி என் தகப்பனரிடம் கேட்பேன்; என் ஆசிரியரையும் கேட்டு அறிவேன். 'நான் விவேகானந்த அடிகளைப் போலப் புகழ் பெறுவேன்' என்னும் உறுதியான எண்ணம் எனக்கு உண்டு; கடவுள் துணை செய்வார் என்று நம்புகிறேன்.

கேள்விகள்

1. கண்ணன் வாசிப்பு அறையைப்பற்றி நீ யாது அறிவாய்?
2. அவன் தகப்பனர் உபதேசம் யாது?
3. விவேகானந்தர் யார்?
4. கண்ணன் தினமும் என்ன செய்கிறான்?
5. நீ கண்ணனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?
6. நீ யாரைப்போல் ஆக விரும்புகிறாய்?
7. உனக்கு வாசிப்பு அறை உண்டா? அதில் என்னென்ன இருக்கின்றன?
8. உன் அறையிலோ, வீட்டிலோ படங்கள் உண்டா? அவை யார் யாருடைய படங்கள்?

பயிற்சி

1. இந்தியா, கண்ணன், தகப்பனர், மகிழ்ச்சி, தூய்மை—இவை என்ன பெயர்கள்?
2. இப்பாடத்தின் முதல் பிரிவில் உள்ள வினைச்சொற்களை எழுது.
3. இரண்டாம் பிரிவில் உள்ள பெயர்ச்சொற்களை எழுது.
4. இப்பாடத்தில் உள்ள பன்மைப் பெயர்களைக் கூறு.
5. இப்பாடத்தில் எத்தனை முற்றுப் புள்ளிகள் உள்ளன? எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?
6. சுத்தம், தூய்மை; இருக்கின்றன, உள்ளன.—

இவை ஒரே பொருளையுடைய இரண்டு இரண்டு சொற்கள்.

மஹான், பெரியார்; பாஷை, மொழி; சுவாமி, அடிகள்; உறுதி, நிச்சயம்; மகிழ்ச்சி, துறவி: இதே பொருள்களை உடைய வேறு சொற்களைச் சொல்.

7. புகழ் × இகழ், பெரியவன் × சிறியவன், பெருமை × சிறுமை, மகிழ்ச்சி × வருத்தம், வெளிநாடு × உள்நாடு.

இவை எதிர்ப் பதங்கள்.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

8. அறையை, தகப்பனாரிடம், நாடுகளில், எனக்கு, இவருடைய, சுத்தமாக: இவற்றை இரண்டு இரண்டு சொற்களாகப் பிரி.

2. எனது குறிப்புப் புத்தகம்

புதிய சொற்கள்:—முடித்துவிட்டு—அவ்வளவு—அவசரம்—தரத்தக்க—உடனுக்குடனே — வைத்துக்கொள்ள — என்றது—எதிர்ப்புறம்—கடத்தல் — ஆபத்தானதே — நெருக்கமுள்ள —பாதை—சாலை—குறுக்கே—திடீரென—தடுக்கி—விழுந்தான் —கஷ்டப்பட்டு —நிறுத்தினான்—ஆயினும்—ஏறிவிட்டது.

தாயார்:—முருகா, என்ன எழுதுகிறாய்? இப்பொழுது தானே பள்ளிக்கூடம் விட்டு வந்தாய்; உடனே என்ன எழுத்து வேலை ? சிறிது நேரம் விளையாடச் செல்.

முருகன்:—அம்மா, இது ஓர் அவசரச் செய்தி. இதை எழுதி முடித்துவிட்டு வருகிறேன். (எழுதி முடித்தல்.)

தாயார்:—தம்பீ, அவ்வளவு அவசரமான செய்தி என்ன?

முருகன்:—அம்மா, 'நீங்கள், வழியில் காணும் நீதியைத் தரத்தக்க சம்பவங்களைப்பற்றி உங்கள் குறிப்புப் புத்தகத்தில் உடனுக்குடனே எழுதிவைத்துக் கொள்ளவேண்டும்' என்று எங்கள் ஆசிரியர் கூறினார். நான் வீடு வரும்போது ஒரு சம்பவம் கண்டேன்; ஆசிரியர் சொன்னபடி அதனை

உடனே எழுதி விட்டேன். இனி நான் விளையாடப் போகலாம்.

தாயார்:—முருகா, என்ன சம்பவம் கண்டாய்?

முருகன்:—வழியில் நானும் வேறு மாணவர் சிலரும் இடதுகைப் பக்கமாக வந்துகொண்டு இருந்தோம். மாண வருள் ஒருவன், "உபாத்தியாயர் இடது கைப்பக்கம் நடக்கவேண்டும் என்றது நல்லதே. வலது கைப்பக் கம் எதிர்ப் புறத்திலிருந்து மனிதர் கள் வருகிறார்கள்; வண்டிகளும் வருகின்றன. 'சாலையை வேடிக்கை யாகக் கடக்காதே' என்று ஆசிரியர் சொன்னதும் நல்லதே. இந்தச் சாலையில் வண்டிகள் அதிகமாக வருகின்றன. இச் சமயத்தில் இத னைக் கடத்தல் ஆபத்தானதே" என்றான்.



உடனே கோவிந்தன் என்னும் மாணவன் சிரித்து, "இந்த நெருக்கமுள்ள பாதையை நான் கடக்கிறேன், பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே சாலையின் குறுக்கே நடந்தான். திடீரென எதிரில் சைக்கிள் வண்டி வந்தது. கோவிந்தன் சைக்கிள் வண்டியில் மோதிக் கீழே விழுந்தான். சைக்கிள் ஓட்டி என்ன செய்வான்! அவன் வண்டியைக் கஷ்டப்பட்டு நிறுத்தினான். ஆயினும், அதன் முதல் சக்கரம் கோவிந்தன் கால்மீது ஏறிவிட்டது. கோவிந்தன் 'ஓ' என்று அலறினான். உடனே சிலர் அவனைத் தூக்கிக்கொண்டு அவன் வீடு சென்றனர். இது தான் இன்று மாலை நடந்த நிகழ்ச்சி.

தாயார்:—சரி. நீ இதிலிருந்து கற்றுக்கொண்ட நீதி யாது?

முருகன்:—'**மூத்தோர் சொற்படி நடக்க வேண்டும்**' என்பதே நான் இன்று கற்றுக்கொண்ட பாடம்.

தாயார்:—முருகா, நீ இப்படியே தினந்தோறும் காணும் நிகழ்ச்சிகளைப்பற்றி எனக்கும் சொல்; தகப்பனுரிடமும் தெரிவி.

முருகன்:—அம்மா, அப்படியே செய்வேன்.

கேள்விகள்

1. 'குறிப்புப் புத்தகம்' என்பது யாது?
2. முருகன் குறிப்புப் புத்தகத்தில் என்ன எழுதினுன்?
3. அவன் கற்றுக்கொண்ட நீதி யாது?
4. நீ சாலையின் எந்தப் பக்கம் போகிருய்?
5. நீ சாலையைக் கடக்கும்போது என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

1. அவசரம், தாத்தக்க, உடனுக்குடனே, திடீரென— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. ஒரே பொருளைத் தரும் இரண்டு சொற்களை இப்பாடத்திலிருந்து எழுதிக் காட்டு.

3. இடது கை, அவசரம், மாணவர், நல்லதே, நெருக்கம் விழுந்தான், ஏறி, மாலை, மூத்தோர்—எதிர்ப் பதங்களைக் கூறு.

4. கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடர் '**வாக்கியம்**' என்பதை நீங்கள் மூன்ரும் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? இங்கு, அந்த வாக்கியத்தில் என்னென்ன இருக்கின்றன என்பதைக் காண்போம்:

இராமன் புத்தகம் வாங்கினுன்—இது ஒரு வாக்கியம். இதில் **வாங்கினுன்** என்பது **வினைமுற்று**. இது பயனிலை என்றும் சொல்

லப்படும். வாங்கினான் என்பதற்கு முன் 'யார்' என்பதை வைத்து, 'யார் வாங்கினான்?' என்று கேட்டால், 'இராமன்' என்பது பதிலாகும். இப்படி வரும் பதில் எழுவாய் (வினையைச் செய்பவன்) எனப்படும். மீண்டும், வாங்கினான் என்பதன் முன் 'எதை அல்லது யாரை' என்பதை வைத்து, 'எதை வாங்கினான்?' என்று கேட்டால், 'புத்தகம்' என்பது பதில் ஆகும். இப்பதில் செயப்படுபொருள் எனப்படும்.

ஆகவே, ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்னும் மூன்று சொற்கள் உண்டு என்பதைத் தெரிந்து கொள். மேற்கண்ட கேள்விகளைக் கேட்டு எழுவாயையோ—செயப் படு பொருளையோ கண்டுபிடிக்க வேண்டும்.

அம்மணி அப்பளம் அடுக்கினாள்.—இதில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறு.

3. பதினெட்டாம் பெருக்கு

புதிய சொற்கள்:—சிறந்த— அடுத்து — காவேரி — காவிரி— படித்துறை— பெருக்கு—பழைய — பயிருக்கு—வழக்கத்தை—பின் பற்றி — இறங்கி — கொண்டாடி—மாவிளக்கு—இருல்—நன்மை— போன்றது—கங்கை—அழைக்கின்றனர்.

ஆடி மாதம் பதினெட்டாந் தேதி சிறந்த நாள். அந்த நாளில் எங்கள் ஊரை அடுத்து உள்ள காவேரி ஆற்றில் நீர் அதிகமாக வரும். அது காவிரி என்றும் சொல்லப்படும். படித்துறையில் உள்ள பதினெட்டுப் படிகள் நிறையத் தண்ணீர் ஓடும். அந்த நாள் தான் பதினெட்டாம் பெருக்கு எனப்படும்.

ஆடி மாதம் மழை பெய்யும் மாதம். மலையில் பெய்யும் மழை நீர் எல்லாம் திரண்டு கரை புரண்டு வரும். இப்படி

வருவது ஆடி மாதம் பதினெட்டாந் தேதியில் என்பது பழைய கணக்கு. மழை நீர் பயிருக்கு உயிர் ஆதலால், அந்த நாளை முன்னோர் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். அவர் வழக்கத்தைப் பின்பற்றி இக்காலத்து மக்களும் அந்த நாளைக் கொண்டாடி வருகின்றனர்.



மக்கள் அந்த நாளில் கூட்டங் கூட்டமாக ஆற்றுக்குப் போவர்; படித்துறைகளில் இறங்கி நீராடுவர். சிறுவரும் சிறுமியரும் வாழை மரம், மரக்கட்டை இவற்றைப் பிடித்து நீந்துவர். சிலர் ஒருவர் மீது ஒருவர் தண்ணீர் தெளித்து விளையாடுவர். சிலர் உயர்ந்த இடங்களில் இருந்து ஆற்றில் குதித்து விளையாடுவர்.

பெண்கள் நீராடியதும் தாம் கொண்டு போன மாவிளக்கு, வெற்றிலை, பாக்கு, பழம் இவற்றைக் கரை மீது வைத்துக் காவிரி அம்மனை வழிபடுவார்கள். சிறுவர் கள் தாங்கள் படித்த பழைய ஏடுகளைக் கட்டிக்கொண்டு வந்து ஆற்றில் விடுவார்கள். பழைய காலத்து மக்கள் வெள்ளியாலும் பொன்னாலும் செய்த மீன், இரால், நண்டு இவற்றை ஆற்றில் விடுவது வழக்கம்.

ஆற்று நீரால் பயிர்களும் மனிதர்களும் விலங்கு களும்—ஏன்? எல்லா உயிர்களுமே நன்மை அடைகின் றன. ஆறு எல்லா உயிர்களுக்கும் தாய் போன்றது. ஆதலால் மனிதர்கள் ஆற்றை அம்மனாக நினைத்து வழி படுகின்றனர்; காவிரி அம்மன், கங்கை அம்மன் என்னும் பெயர்களைப் பெண்களுக்கு இட்டும் அழைக் கின்றனர்.

கேள்விகள்

1. பதினெட்டாம் பெருக்கு என்றால் என்ன?
2. அந்த நாளில் யார் யார் என்னென்ன செய்வர்?
3. மக்கள் ஆற்றைப் பெண் தெய்வமாகக் கும்பிடுவது ஏன்?

பயிற்சி

1. புதிய × பழைய, இறங்கி × ஏறி, நன்மை × தீமை, சிறு வர் × சிறுமியர்.

இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. 'மாவிளக்கு' வைக்கும் வேறு நல்ல நாட்கள் எவை?

3. படித்துறை, வழக்கத்தை, சிறந்த, கொண்டாடி—இவற் றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

4. ஆற்றில் நீந்துவதற்கு உரிய கருவிகள் எவை ?

5. ஆறு, மரம், மலை, ஆவணி, கட்டை — என்ன பெயர்ச் சொற்கள்?

6. இப்பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.

7. இப்பாடத்தில் உள்ள வினைச் சொற்களை எழுது.

8. இப்பாடத்தில் எத்தனை வாக்கியங்கள் வந்துள்ளன ?

9. இப்பாடத்தில் எத்தனைப் பிரிவுகள் இருக்கின்றன ?

10. முதல் இரண்டு பிரிவுகளில் உள்ள எ. ப. செ. கூறு.

4. காட்சிச் சாலை

(ஆசிரியரும் மாணவரும்)

புதிய சொற்கள்:—சிங்கம்—கர்ச்சனை—மிருகம்—பிடரி மயிர்—துணியாது—ஊர்வலம் — இறைச்சி — பிளிறுகிறது—ஒட்டகம்—பாலைவனம்—பாலைவனக் கப்பல்—வாகனம்—மாமிசம்—திமில்—விநோதமான—நெருப்புக் கோழி—விழுங்கும்.

ஆசிரியர்:— இதோ, பாருங்கள் சிங்கம். இது பழுப்பு மஞ்சள் நிறம் உடையது. இதன் பிடரி மயிரைப் பாருங்கள். சிங்கமே மிருகங்களுக்கு அரசன். இதனை எதிர்க்க எந்த விலங்கும் துணியாது. இது ஆப்ரிக்கா கண்டத்தில் இருந்து இங்குக் கொண்டு வரப்பட்டது. இதன் கர்ச்சனை ஊர் முழுவதும் கேட்கும்.



இது தான் புலி. இது சிங்கத்துக்கு அடுத்த பலம் உள்ள விலங்கு. இது மிகவும் கொடியது. இது நமது

நாட்டில் உள்ள மலைகளில் இருக்கின்றது. இது ஆடு மாடுகளை அடித்துத் தின்னும்.

இது யானை. இதுவும் நம் நாட்டுக் காடுகளில் உண்டு. இதன் கொம்புகள் சீப்பு, பெட்டி முதலியவை செய்ய





உதவும். இது காடுகளில் வெட்டப்படும் மரத்துண்டுகளை எடுத்துச் செல்ல உதவுகிறது. அரசர்கள் யானை மீது ஊர்வலம் வருவார்கள். யானைப் படை, நால்வகைப் படைகளில் சிறந்தது. யானை இறைச்சி தின்னாது. யானை கத்துதலைப் 'பிளிறுகிறது' என்பர்.



பிள்ளைகள்:— ஐயா, கழுத்து நீண்டுள்ள அது என்ன விலங்கு?

ஆசிரியர்:— அது தான் ஒட்டகம். அது பாலை வனங்களில் இருப்பது. அது பாலை வனத்தைக் கடக்க விரும்பும் மக்களுக்கு வாகனம் ஆகிறது. அதைப் பாலைவனக் கப்பல் என்னலாம். அதுவும் மாமிசம்

தின்னுது. அது பல நாட்களுக்கு வேண்டும் உணவைத் தன் திமிலில் அடக்கிக் கொள்ளும். அது ஒரு விநோத விலங்கு.

இதனைப் பாருங்கள்: இதுவும் பாலை வனத்துப் பறவை. இதன் பெயர் **நெருப்புக் கோழி**. இது நெருப்பை விழுங்கும்; இதன் முட்டை மிகப் பெரியது. இதுவும் பாலை வனத்தைக் கடக்கப் பயன்படுகிறது. இது எவ்வளவு உயரமாக இருக்கிறது, பாருங்கள்!





பிள்ளைகள்:— ஐயா, ஐயா, அதோ கரடி! நாம் மூன்றும் வகுப்புப் புத்தகத்தில் கரடியைப் பற்றிப் படித்தோமே!

ஆசிரியர்:—ஆம், அது கரடி தான். அது கருமை நிறம் உடையது. அது நமது நாட்டிலும் கிடைப்பதே. ஆனுல் அதற்கு அடுத்த கூண்டில் இருப்பது வெள்ளைக் கரடி. அது ருஷியா தேசத்தில் இருப்பது. அங்குக் குளிர் அதிகம் ஆதலால் அது வெண்மையாக இருக்கிறது.

பிள்ளைகள்:— என்ன அற்புதம்! எத்தனை விதமான விலங்குகள்! எத்தனை விதமான பறவைகள்! கடவுள் படைப்பே படைப்பு!

ஆசிரியர்:—ஆம். கடவுள் படைப்பில் பல விநோதங்கள் உண்டு. நாம் மற்றொரு முறை இக் காட்சிச் சாலைக்கு வந்து மற்றவற்றைப் பார்ப்போம். வாருங்கள், போகலாம்.

கேள்விகள்

1. காட்சிச்சாலை என்றால் என்ன?
2. இப்பாடத்தில் வந்துள்ள இறைச்சி தின்பவை எவை? தின்னாதவை எவை?
3. பாலைவனப் பறவையும் விலங்கும் எவை?
4. யானை எப்படிப் பயன்படுகிறது?
5. சிங்கத்தின் கூச்சல், யானையின் கூச்சல் - என்ன பெயர் பெறும்?
6. நீ காட்சிச் சாலையைப் பார்த்ததுண்டா?
7. நீ பார்த்துள்ள வேறு விலங்குகள்—பறவைகள் பற்றிச் சொல்.
8. காட்சிச் சாலைகளைப் பார்ப்பதால் உண்டாகும் நன்மை என்ன?

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள பொருள்—இடம்—சினை—குணப் பெயர்களைக் கட்டம் போட்டு எழுது.
2. இப்படத்தில் வந்துள்ள எ. ப. செ. கூறு.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—
   (1) கடவுள்———பல———உண்டு.
   (2) சிங்கம்——மஞ்சள் நிறம்——.
   (3) ஒட்டகம்——வனங்களில்——.
   (4) இதுவும் பாலை ——— ——.
4. கர்ச்சனை, பிளிறுகிறது, விநோதமான, ஊர்வலம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.
5. விலங்கு, மிருகம்; இறைச்சி, மாமிசம்; உதவுகிறது, பயன்படுகிறது.—இவை ஒரே பொருளைத் தரும் இரண்டு சொற்கள். இவற்றை வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

5. ஆறு

புதிய சொற்கள்:—தவழ்ந்து—சமவெளி—அணை—சாடி—கண்ணறை—திட்டு—மடைச் சீப்புகள்—அழல்—ஆற்றி—கண்குளிர—ஆயும்—மலர்ப் பொழில்—ஆசைதீர—ஊற்று—பொங்கிட—அரைத்து—நூற்று—பாகமாய்—சீனி—உலர்ந்த—நெடுநகரில்—வாரி—அள்ளி.

கல்லும் மலையும் குதித்துவந்தேன்; பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்;அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந் தேன்; மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந் தேன்; அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந் தேன்;அங்கென
ஆசைதீ ரவிளை யாடிவந்தேன். 3

ஏறுத மேடுகள் ஏறிவந் தேன்; பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறுத ஊற்றிலும் உட்புகுந் தேன்; மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந் தேன்;சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநக ரில்குழாய்
நீராக வும்சென்று பாய்ந்துவந்தேன். 5

மாங்கனி தேங்கனி வாரிவந் தேன்;நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
நிற்க எனக்கினி நேரமில்லை; இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமப்பா. 6

—தேசிக விநாயகம் பிள்ளை

கேள்விகள்

1. ஆறு செய்யும் அற்புத வேலைகள் யாவை?
2. ஆற்றால் நமக்கும் உண்டாகும் நன்மை என்ன?
3. இப்பாட்டின் ஆசிரியர் யார்? அவரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

குறிப்பு:—இப்பாட்டின் ஆசிரியர் நாகர்கோவிலைச் சேர்ந்தவர்; சிறந்த புலவர்; தமிழ் ஆராய்ச்சி மிக்குடையவர்.

பயிற்சி

1. குதித்து, கடந்து, சமவெளி, திட்டுத் திடர்கள், நீண்ட வழி, மலர்ப் பொழில்—உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. தவழ்ந்து தவழ்ந்து—இப்படித் தனியே வரத்தக்க ஒரே சொல், இரண்டு அல்லது மூன்று முறை அடுக்கி வந்தால் 'அடுக்குத் தொடர்' எனப்படும்.

வீடு வீடு, காடு காடு, நாடு நாடு, பிடி பிடி—அடுக்குத் தொடர்கள்.

3. கல்லும் மலையும் குதித்து வந்தேன்.—இந்த வாக்கியத்தில் 'குதித்து வந்தேன்' என்பது பயனிலை. 'யார் குதித்து வந்தேன்?' என்று கேட்டால், 'நான்' என்பது பதிலாகும். அதுவே எழுவாய். ஆனால், இந்த வாக்கியத்தில் எழுவாய் இல்லை. அது தோன்றாமல் (மறைந்து) இருக்கிறது. இப்படி மறைந்துவரும் எழுவாய் 'தோன்றா எழுவாய்' எனப்படும்.

வா, போ, நில், எழுந்திரு, படி.—இவற்றுக்கு எல்லாம் 'நீ' என்பது தோன்று எழுவாய்.

4. இப்பாட்டில் இவ்விதம் தோன்று எழுவாய் உள்ள வாக்கியங்களைக் கண்டுபிடி.

5. பிழைகளைத் திருத்துக:—

(1) தெறுவில் பளத்தோலை எரியாதே.
(2) கண்ணன் நல்ல சிருவன்.
(3) அவென் நேத்தே வந்தான்.
(4) ஓரல் ஒலக்கெ வாங்கி வா.
(5) அவன் நாளை வந்தான்.
(6) நான் நேற்று வருவேன்.
(7) நீ இன்று வந்தான்.
(8) அவன் படித்தார்.
(9) அவள் நேற்றுப் படிப்பார்.
(10) எலி வளையில் நுழைந்தன.
(11) பசுக்கள் ஓடுகிறது.
(12) நாய் இன்று எலும்பைக் கடித்தது.
(13) ஆசிரியர் விளையாடுகிறான்.
(14) பிள்ளைகள் படிக்கிறாள்.
(15) நான் போனான்.

6. கதைப் படம்

நான்கு எருதுகள்

படம் பார்த்துக் கதை சொல்.



பயிற்சி

1. இக்கதையை 12 வாக்கியங்களில் சொல் ; பிறகு எழுது.

2. நீ இக் கதையால் அறியும் நீதி யாது ?

3. இப்படி வேறு கதை இருக்குமாயின், சொல்.

4. எருதுகள் இந்தக் கதையைச் சொல்வது போலச் சொல்.

5. சிங்கம் இந்தக் கதையைச் சொல்வது போலச் சொல்.

6. முதல் எருது இக்கதையைச் சொல்வது போலச் சொல்.

7. இரண்டாம் எருது இக்கதையைச் சொல்வது போலச் சொல்.

8. மூன்றும் எருது இக்கதையைச் சொல்வது போலச் சொல்.

9. கடைசி எருது இக்கதையைச் சொல்வது போலச் சொல்.

10. பொருட்பெயர், இடப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர்— இவற்றுக்கு இரண்டிரண்டு உதாரணம் தருக.

11. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால்.—இரண்டிரண்டு உதாரணம் தருக.

12. நமது கந்தன் பெரிய கணக்கு எழுதினுன்.—இதில் உள்ள எ. ப. செ. கூறு.

7. ஐவர் அவை

புதிய சொற்கள்:—பஞ்சாயத் போர்டு—அவை—சபை—உறுப்பினர்—தேர்தல்—தேர்ந்தெடுக்கப்பட்ட—அவைத்தலைவர்—துணைத் தலைவர்—முஸ்லீம்கள்—ஆதித்திராவிடர்—அம்மையார்—வகுப்பார்—பதவி—கௌரவம்—ஊதியம்—பொதுஜனத் தொண்டு—முற்பட—வகித்து—சாக்கடை—சுகாதாரம்—ஆரம்பக் கல்வி—சந்தை—மந்தை வெளி—முன்னேற்றம்—அவையார்—அரசாங்கத்தார்—நகர சபை—ஜில்லா போர்டு—நடைபெறுகின்றன.

பெரிய கிராமத்தின் பாதுகாப்பைக் கவனிக்கச் சபை ஒன்று உண்டு. அது **பஞ்சாயத் போர்டு** எனப்படும். அது தமிழில் **ஐவர் அவை** எனப்படும். முன் காலத்தில் ஐவர்



அவையில் ஐவரே இருந்து கிராம விஷயங்களைக் கவனித்து வந்தனர். ஆனால் இப்பொழுது ஐவருக்கு மேற்பட்டவரே அச் சபையில் இருக்கின்றனர். ஆயினும், அந்த அவையின் பெயர் பழைய பெயராகவே இருந்து வருகிறது.

ஐவர் அவையில் உறுப்பினர் பதவிக்குச் சிலர் நிற்பர். அவர்களுள் திறமை உடையவர்களையே கிராமத்தார் தேர்ந்து எடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், தங்களுக்குள் தேர்தலை நடத்தி அவைத் தலைவர், துணைத் தலைவர்களைத் தேர்ந்து எடுப்பர்.

தெருக்களையும் சாக்கடைகளையும் சுத்தமாக வைத்திருத்தல், தெருக்களில் விளக்குப் போடுதல், கிராம சுகாதாரத்தைக் கவனித்தல், ஆரம்பக் கல்வியை வளர்த்தல், கிராமப் பள்ளிக்கூடம், மந்தைவெளி, சந்தை கூடும் இடம், கிராம முன்னேற்றத்துக்கான வேறு விஷயங்கள் இவற்றைக் கவனித்தல் முதலிய கிராம வேலைகளை ஐவர் அவையார் பார்த்து வருகின்றனர்.

இந்த வேலைகளுக்குப் பணம் வேண்டும் அல்லவா? அதனால் அவர்கள் வீட்டு வரி, தொழில் வரி, விளக்குவரி, சந்தை வரி, அரசாங்கத்தார் தரும் உதவிப் பணம், வேறு பல சிறிய வரிகள் மூலம் பெறும் பணம் ஆகிய இவற்றையே இந்த வேலைகளுக்குச் செலவு செய்கிறார்கள்.

பஞ்சாயத் போர்டில் முஸ்லீம்கள், ஆதித்திராவிடர், பெண்கள் முதலியோர் இடம் பெற்று இருப்பர். எல்லா வகுப்பாரும் தேர்தலில் நிற்கலாம். இந்தப் பதவி கௌரவப் பதவியே அன்றி, மாத ஊதியம் வரும் பதவி அன்று. ஆதலால், இந்தப் பதவிக்கு வருபவர் பொதுஜனத் தொண்டு செய்ய விருப்பம் உடையவரே ஆவர்.

நீங்கள் பெரியவர்கள் ஆன பிறகு, இத்தகைய கௌரவப் பதவிகளில் அமர்ந்து, பொது மக்களுக்கு நன்மை செய்ய முற்பட வேண்டும். நகரங்களில் இருப்பவர்

நகர சபைகளில் கௌரவப் பதவி வகித்து, நகர சுகாதாரம், வைத்தியம், விளக்குப் போடுதல், வரி வசூலித்தல் முதலிய நகரசபை வேலைகளைக் கவனிக்க வேண்டும். நீங்கள் இவ் வேலைகளை மாத வருமானம் இல்லாமல் செய்வீர்களா ?

கேள்விகள்

1. கிராமப் பஞ்சாயத் சபை—யாது ?

2. அதில் உள்ள உறுப்பினர் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

3. ஐவர் அவையினர் வேலைகள் யாவை ?

4. உறுப்பினர் எந்த நோக்கம் உடையவராக இருக்க வேண்டும் ?

5. நகர சபையாரின் வேலைகள் எவை ?

பயிற்சி

1. அவை, சபை; உறுப்பினர், அங்கத்தினர்; பதவி, இடம்; வருமானம், ஊதியம்.—இவை, ஒரே பொருளை உணர்த்தும் இரண்டு இரண்டு சொற்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. அவை, உறுப்பினர், பதவி, வருமானம், தேர்தல், பொது மக்கள், தொண்டு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. முதல் பிரிவில் உள்ள பயனிலைகளைச் சொல்.

4. இரண்டாம் பிரிவில் உள்ள எழுவாய்களைக் கூறு.

5. மூன்றும் பிரிவில் உள்ள செயப்படுபொருள்களைச் சொல்.

6. நான்காம் பிரிவில் உள்ள எ. ப. செ. எழுது. (இவ்வாறு கட்டம் இட்டு எழுது.)

எண்	எழுவாய்	பயனிலை	செயப்படு பொருள்
1.			
2.			
3.			
4.			
5.			
6.			

7. ஐந்தாம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்கள், ஒருமை—பன்மைப் பெயர்கள் இவற்றை எழுது.

8. மௌன வாசிப்பு—I

மெழுகால் ஆன சிங்கம்

புதிய சொற்கள்:—மகத நாட்டை—நந்தர்கள்—சந்திரகுப்தன்—பொறுமை—துன்புறுத்தினார்கள்—பட்டத்திலிருந்து—விரட்டுவான்—கல்வி அறிவு - வசிகரம் — உலக ஞானம் — த வ று ர்—பொருந்தி—நகைப்பானே—அஞ்சினார்கள்—பழுக்க - காய்ச்சினான்—செருகினான்—விலாப் புறத்தில்—பாராட்டி—பரிசு.

வட இந்தியாவில் மகத நாட்டை நந்தர்கள் என்னும் அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் சந்திரகுப்தன் என்னும் வீரன் மீது பொறுமை கொண்டார்கள்; அதனால் அவனைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினார்கள். சந்திரகுப்தன் தங்களைப் பட்டத்திலிருந்து விரட்டுவான் என்ற பயமே அவர்கள் கொடுமைக்குக் காரணம் ஆகும்.

சந்திரகுப்தன் கல்வி அறிவு மிகுதியும் இல்லாதவன். எனினும், அவன் உலக ஞானம் உடையவன்; முக வசீ

கரம் உடையவன் ; அவனைக் காண்பவர் அவன் சொற்படி நடக்கத் தவறார். அவனிடம் அரசனுக்கு வேண்டும் நல்ல குணங்கள் எல்லாம் பொருந்தி இருந்தன. மகத நாட்டு மக்களும் அவனை விரும்பினார்கள்.

அவன் கூரிய அறிவுடையவன் என்பதை அறிந்த அடுத்த நாட்டு அரசன், நந்தரைச் சோதிக்க விரும்பினான்.



அவன் மெழுகாற் செய்த சிங்கம் ஒன்றைக் கூண்டில் அடைத்தான் ; அதை நந்தர்களிடம் அனுப்பினான்; 'கூண்டைத் திறவாமல் சிங்கத்தை விரட்டுபவனே அறிவாளி. நீங்கள் இதனைச் செய்வீர்களா?' என்று கடிதம் எழுதி இருந்தான்.

நந்தர்கள் யோசித்துப் பார்த்தார்கள்; கூண்டைத் திறவாமல் சிங்கத்தை வெளியே விரட்டுவது முடியாது என்னும் முடிவுக்கு வந்தார்கள். ஆயினும், அடுத்த நாட்டு அரசன் நகைப்பானே என்று அஞ்சினர்கள்; செய்வகை தோன்ருமல் ஆந்தையைப் போல் விழித்தார்கள்; பிறகு அவர்கள் சந்திரகுப்தனைச் சிறையிலிருந்து வரவழைத்தனர்; அவனிடம் விஷயத்தைக் கூறினர்; அவன் அம்முயற்சியில் வெற்றி பெற்ருல் விடுதலை செய்வதாக உறுதி கூறினர்.

சந்திரகுப்தன் சிறிது நேரம் யோசித்தான்; ஓர் இரும்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சினன்; அதனைச் சிங்கத்தின் மார்பில் செருகினன். ஆ! என்ன வியப்பு! சில நிமிஷங்களுக்குள் சிங்கம் மறைந்தது; கூண்டைத் திறவாமலே சிங்கம் விரட்டப்பட்டது. சந்திரகுப்தன் கலகல என்று சிரித்தான்.

நந்தர்கள் சந்திரகுப்தனது நுண்ணறிவைப் பாராட்டினர்; அவனுக்கு வேண்டும் பரிசுகள் தந்து, அவனை விடுதலை செய்தனர். அடுத்த நாட்டு அரசனும் சந்திர குப்தனைப் பாராட்டி வாழ்த்தினன்.

கேள்விகள்

1. நந்தர்கள் யார்? அவர்கள் சந்திரகுப்தனைச் சிறைப்படுத்தியது ஏன்?

2. சந்திரகுப்தனுடைய நற்குணங்கள் எவை?

3. அடுத்த நாட்டு அரசன் அனுப்பியது யாது? அவன் விருப்பம் என்ன?

4. சந்திரகுப்தன் எப்படி விடுதலை அடைந்தான்?

5. நீ இக்கதையிலிருந்து அறியும் நீதி யாது?

பயிற்சி

1. முருகன் படித்தான், முருகன் படிக்கிறான், முருகன் படிப்பான்.—இவற்றுள்,

(1) படித்தான்—என்பது நடந்துவிட்ட செயலையும்,

(2) படிக்கிறான்—என்பது நடக்கின்ற செயலையும்,

(3) படிப்பான்—என்பது நடக்கப்போகும் செயலையும் குறிக்கும் வினைச் சொற்கள். இவை முறையே இறந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும் உணர்த்துகின்றன.

இங்குத் தரப்பட்டுள்ள மூன்றுகால வினை முற்றுகளையும் படி:—

எண்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1.	வந்தான்	வருகிறான்	வருவான்
2.	உண்டாள்	உண்கிறாள்	உண்பாள்
3.	எழுதினார்	எழுதுகிறார்	எழுதுவார்
4.	அடித்தது	அடிக்கிறது	அடிக்கும்
5.	எழுந்தன	எழுகின்றன	எழும்

2. இந்தக் கதையை நிகழ்காலத்தில் கூறுக. (நிகழ்கால வினை முற்றுகளைப் போட்டுச் சொல்.)

3. இந்தக் கதையை எதிர்கால வினை முற்றுகளைப் போட்டுச் சொல்,

4. சந்திரகுப்தன்—'நீ' என நினைத்து, இக்கதையைச் சொல்.

5. நீ சந்திரகுப்தனைப் பார்த்து இதைச் சொல்வதாக நினைத்துச் சொல்.

6. இவை போன்ற வினை முற்றுகளை (கட்டம் போட்டு) இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதுக.

9. மௌன வாசிப்பு—II

புதிய சொற்கள்:—மௌனம்—வருமாறு—கண்ணகி—நோட்டுப் புத்தகம்.

நான் நான்காம் வகுப்பு மாணவி. என் பெயர் கண்ணகி. எங்கள் ஆசிரியர் நேற்று 'மௌன வாசிப்பு' என்பதைப் பற்றிக் கீழ் வருமாறு சொன்னார்:



"நீங்கள் எட்டாம் பாடத்தை மௌனமாக வாசியுங்கள்; அதில் உள்ள கடின சொற்களை எல்லாம் உங்கள் மௌன வாசிப்பு நோட்டுப் புத்தகத்தில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுங்கள்; அதில் வரும் இரட்டைச் சொற்கள், அழகான தொடர்கள் முதலியவற்றை ஒரு பக்கத்தில் எழுதுங்கள்; வேறு ஒரு பக்கத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடுங்கள்; நான்காம் பக்கத்தில் கதையைச் சுருக்கி

எழுதுங்கள்; நீங்கள் எழுதும் பொழுது வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு எழுதுங்கள்."

நான் என் ஆசிரியர் சொன்னபடி, எனது மௌன வாசிப்பு நோட்டுப் புத்தகத்தில் ஒரு பக்கத்தில் '**கடின பதங்கள்**'' என்னும் தலைப்பும், ஒரு பக்கத்தில் 'இரட்டைச் சொற்களும் அழகான தொடர்களும்' என்னும் தலைப்பும், மூன்றும் பக்கத்தில் 'பாடப் பிரிவுகளின் தலைப்புகள்' என்னும் தலைப்பும், நான்காம் பக்கத்தில் 'கதைச் சுருக்கம்' என்னும் தலைப்பும் முதலில் எழுதிக் கொண்டேன்; பிறகு எட்டாம் பாடத்தை இரண்டு முறைப் படித்தேன்; ஒவ்வொரு பகுதியிலும் கீழ்க் கண்டவாறு குறித்துக் கொண்டேன்:

I. கடின சொற்கள்

மகத நாடு—
துன்புறுத்தினர்கள்—
உலக ஞானம்—
முக வசீகரம்
கூரிய—
நகைப்பானே—
பழுக்க—
பரிசு—

II. அருந்தொடர்கள்

ஆந்தையைப்பேல் விழித்தார்கள்.
கலகல—இரட்டைச் சொல்.

III. பிரிவுகளின் தலைப்புகள்

1. நந்தர்கள் கொடுமை
2. சந்திரகுப்தன் நற்குணங்கள்
3. மெழுகால் ஆன சிங்கம்
4. நந்தர்கள் ஆலோசனை
5. சந்திரகுப்தன் நுண்ணறிவு
6. சந்திரகுப்தன் பெற்ற பெருமை

நீதி—

IV. **கதைச் சுருக்கம்:**

1. மகத நாட்டை ஆண்ட நந்தர்கள் சந்திரகுப்தன் என்பவனைச் சிறையில் அடைத்துவைத்துக் கொடுமை செய்தார்கள்.

2. சந்திரகுப்தன் நல்ல குணங்களை உடையவன்; முக வசீகரம் உடையவன். அவனை விரும்பாதவர் இல்லை.

3. அடுத்த நாட்டு அரசன் மெழுகாலான சிங்கம் ஒன்றைக் கூண்டில் வைத்து நந்தர்களுக்கு அனுப்பினான்; கூண்டைத் திறவாமலே சிங்கத்தை விரட்டும்படிக் கூறினான்.

4. நந்தர்களால் அப்படிச் செய்ய முடியவில்லை. அவர்கள் சந்திரகுப்தனை வரவழைத்து, அதைச் செய்தால் விடுதலை செய்வதாக வாக்களித்தார்கள்.

5. சந்திரகுப்தன் சிறிதுநேரம் யோசித்தான்; பிறகு பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டை எடுத்தான்; சிங்கத்தின் மார்பில் செருகினான். மெழுகு கரைந்தது; சிங்கம் மறைந்தது.

6. நந்தர்களும் அடுத்த நாட்டு அரசனும் சந்திரகுப்தனைப் பாராட்டிப் பரிசுகள் அளித்தனர். சந்திரகுப்தன் விடுதலை அடைந்தான்.

நீதி : 'புத்திமானே பலவான்.'

பயிற்சி

1. நின்றார், வருவான், வருகின்றன.—என்னென்ன கால வினை முற்றுகள்?

2. மற்ற இரண்டு கால வினை முற்றுகளையும் சொல்.

எண்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1.	நின்றார்		
2.		வருகின்றன	
3.			
4.			வருவான்
5.			
6.			

10. முயன்ருல் முடியாதது உண்டா?

புதிய சொற்கள்:—பேரான்—சீரான்—சால—இடைவிடாமல்—உற்ருன்—அவ்வை—போற்றி—திண்ணன்—ஆணை—அமர்க—ஏற்ப—ஏற்றம்—அமைச்சன்—ஏற்றதாகும்—இனிய—மைந்தன்—மந்திரி—கணமும்—வியந்தான்.

கந்தை கட்டிக் காலம் கழித்த
கண்ணன் என்னும் பேரான்—தினம்
சந்தி விளக்கின் உதவி கொண்டே
சாலக் கற்ற சீரான். 1

ஆதி நாளில் அமைந்த நூல்கள்
அனைத்தும் படித்தே அறிந்தான்.—அவன்
ஓதி ஓதி உலகில் உள்ள
உண்மை பலவும் தெரிந்தான். 2

இந்தக் கால நூல்கள் பலவும்
இடைவிடாமல் கற்ருன்;—'நாம்
இனிப் பிழைக்க வேண்டும் அன்ருே?'
என்று கவலை உற்ருன். 3

அறிவு நிறைந்த அறிஞர் பலரும்
அவனைச் சூழ்ந்து நின்ருர்;—'இவன்
அறிவில் அவ்வை ஆவன்' என்றே
அறைந்து போற்றிச் சென்ருர். 4

கண்ணன் புகழை அரசன் கேட்டுக்
காண ஆசை கொண்டான்.—உடன்
திண்ணன் என்னும் காவல் காரன்
கண்ணனேடு வந்தான். 5

அரசன் கேள்வி கேட்டுக் கண்ணன்
அறிவைச் சாலப் புகழ்ந்தான் ;—‘இவன்
அரச அவையில் அமர்க’ என்றே
ஆணை இட்டு மகிழ்ந்தான். 6

கண்ணன் அறிவைக் கணமும் அரசன்
கண்டு கண்டு களித்தான் ;—தன்
எண்ணம் அறிந்தே ஏற்பக் கூறும்
ஏற்றம் கண்டு வியந்தான். 7

‘எனக்குக் கண்ணன் அமைச்சன் ஆதல்
ஏற்ற தாகும்’ என்றே—தன்
மனத்துக் கினிய மைந்தன் தன்னை
மந்திரி ஆக்கிக் கொண்டான். 8

—வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.

அரும் பொருள்:— சால—அதிகமாக, சீரான்—சிறப்புடையவன், அவ்வை—தமிழ்ப் புலவர் (பெண்பால்), ஆணை—கட்டளை, களித்தான்—மகிழ்ந்தான், ஏற்ப—தக்கபடி, ஏற்றம்—உயர்வு, மைந்தன்—இளைஞன் (வாலிபன்).

பயிற்சி

1. கண்ணன் வரலாற்றைச் சுருக்கிச் சொல்; சொன்னதை எழுது.

2. கண்ணன் எதனால் மந்திரி ஆனான் ? உன் விடையை எழுது.

3. சால, இடை விடாமல், சூழ்ந்து, ஆணை, அமர்க.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

4. ஆணை, உற்றான், அமைச்சன், சால—இதே பொருளையுடைய வேறு சொற்களைக் கூறு.

5. இப்பாடத்தில் உள்ள வினைமுற்றுகளை எழுது.

6. இப்பாடத்தில் உள்ள வாக்கியங்கள் எத்தனை ? அவற்றில் உள்ள எ. ப. செ. கட்டம் போட்டு எழுது.

7. இப்பாடத்தில் வந்துள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.

8. இதில் உள்ள பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர்களைச் சொல்; பிறகு கட்டம் போட்டு எழுது.

9. அறிந்தான், சென்றார், வந்தான்—என்ன கால வினை முற்றுகள்? இவற்றுக்கு உரிய மற்ற இரண்டு கால வினை முற்றுகளையும் கட்டம் போட்டு எழுது.

10. இப்பாடத்தில் உள்ள இறந்த கால வினைமுற்றுகளுக்குப் பதிலாக நிகழ்கால வினை முற்றுகளையும் எதிர்கால வினைமுற்றுகளையும் அமைத்துப் படி.

11. நெற்பயிர்

புதிய சொற்கள்:—மற்றொரு — பயிர்—நன்செய்—புன்செய்—உழவர்—வேரூன்றி —மக்கிய — மாட்டுச்சாணி — சாம்பல்—ஊற வைப்பர் — எருக்கள்—நாற்று—களை எடுத்தல் —அவ்வப்போது—கதிர்விட்டு—கற்றறிந்த—வைக்கோல் — தூவி—ஏற்றப்படும்—கார்—சம்பா—சிறு மணியன்—கோன் — வேளாளர்—அமைச்சர்—அரசாங்கம்—ஒப்பில்லை.

பயிர் நிலங்கள் இருவகைப்படும். நெல் விளையும் நிலங்கள் ஒருவகை; வேறு தானியங்கள் விளையும் நிலங்கள் மற்றொரு வகை. நெல் விளையும் நிலங்கள் **நன்செய்** நிலங்கள் எனப்படும்; மற்றவை விளையும் நிலங்கள் **புன்செய்** நிலங்கள் எனப்படும். நிலங்களில் செழிப்பானது நன்செய் நிலமே ஆகும்.

நெற்பயிரே பயிர் வகைகளில் சிறந்தது. உழவர் நன்செய் நிலத்திற்கு நீர் பாய்ச்சி ஊற வைப்பர்; நிலம் நன்றாய் ஊறிய பிறகு ஏர் கொண்டு உழுவர்; அகல

உழுவதைவிட ஆழமாக உழுவர்; அப்படிச் செய்தால்தான் நெற்பயிர் வேரூன்றி நன்றாய் முளைக்கும். உழவர் வயலில் சிறந்த எருக்களைப் போடுவர். மக்கிய மாட்டுச் சாணி, சாம்பல், குப்பை, பிண்ணாக்கு வகைகள் முதலியவை நல்ல எருக்களாம்.



நிலம் பண்பட்டு எருவும் மண்ணும் கலந்தபிறகு உழவர் நெல் விதைகளை விதைப்பார்கள்; முளை வெளிவந்த பிறகு அந்த நாற்றுகளைப் பறித்து, வேறு வயல்களில் நடுவார்கள்; இது 'நாற்று நடுதல்' எனப்படும்; உழவர் அவ்வப்போது வயல்களில் முளைக்கும் புல்பூண்டுகளைக் களைந்து எறிவார்கள். இது 'களை எடுத்தல்' எனப்படும்.

உழவர், இமைகள் கண்ணைக் காப்பதுபோலப் பயிர்களைக் காப்பார்கள்; பயிர்கள் கதிர்விட்டு நெல் மணிகள் முற்றும். முற்றிய கதிர்கள், கற்றறிந்த பெரியோர் அடக்கமாக இருத்தல்போலத் தலை சாய்ந்து கிடக்கும். மணிகள் நன்றாய் முற்றிய பிறகே நெற்கதிர்கள் அறுக்கப்படும். இது அறுவடை எனப்படும்.

அறுக்கப்பட்ட கதிர்கள் களத்தில் சேர்க்கப்படும். அங்கு அவை அடிக்கப்படும். இது **'போர் அடித்தல்'** எனப்படும். நெல் மணிகள் வேருகவும் வைக்கோல் வேருகவும் பிரிக்கப்படும்; நெல்மணிகள் தூவித் தூய்மை செய்யப்படும். பிறகு அவை சாக்குகளில் போடப்பட்டு வண்டிகளில் ஏற்றப்படும். நெல் மூட்டைகள் உழவர் வீடுகளில் சேர்க்கப்படும்.

நெல்லில் பல வகை உண்டு; அவை கார், சம்பா, சிறு மணியன் முதலியன. வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயர்வான். ஆதலால், எல்லாவற்றுக்கும் முதற் காரணம் மழை. அதற்கு அடுத்தது பயிர்த்தொழில். இத் தொழில் செய்பவர் **வேளாளர்** ஆவர். அவர்களாற்ருன் உலகத்து உயிர்களுக்கு உணவு கிடைக்கிறது. ஆதலால், பழைய காலத்து வேந்தர்கள் வேளாளரைப் பெருமைப் படுத்தினர்; தங்கள் அமைச்சர்களாகவும் பெரிய உத்தியோகஸ்தர்களாகவும் வைத்துக்கொண்டு இருந்தனர். இன்றும் அரசாங்கத்திற்கு அதிக வரி கொடுப்பவர் வேளாளரே ஆவர்.

'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லே.'

கேள்விகள்

1. நன்செய் எது? புன்செய் எது?
2. விதைப்பதற்குமுன் செய்யவேண்டும் வேலைகள் எவை?
3. விதைத்தபின் செய்யவேண்டுபவை யாவை?
4. உழவர் பயிர்களே எப்படிப் பாதுகாப்பர்?
5. முற்றிய பயிர்கள் எப்படி இருக்கும்?

6. அறுவடை, களையெடுத்தல், நாற்று நடுதல், போர் அடித்தல்—என்றால் என்ன ?

7. வேளாளர் யார் ? அவர் எப்படி உயர்ந்தவர் ஆவர் ?

பயிற்சி

1. இப்பாடத்தில் உள்ள 'உழவர்' என்று வரும் இடங்களில் எல்லாம் 'நாங்கள்' என்பதை வைத்துப் படி ; பிறகு 'நீங்கள்' என்பதை வைத்துப் படி.

2. எருப்போட்டு, அறுவடை, களை யெடுத்தல், ஆழ வுழுதல்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

3. முதல் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கூறு.

4. இரண்டாம் பிரிவில் உள்ள ஒருமை—பன்மைகளைச் சொல்.

5. மூன்றாம் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை ? அவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.

6. நான்காம் பிரிவில் உள்ள வினைமுற்றுகள் என்ன காலத்தவை ? அவற்றுக்கு உரிய மற்ற இரண்டு கால வினைமுற்றுகளையும் கூறு.

7. பொருள் கூறு:—கலைந்து — களைந்து, கலம்—களம், வேறாகும்—வேராகும், வேளாளர்—வேலாளர்.

8. பிழைகளைத் திருத்து:—

(1) கலை எடுத்தல் (2) நெல்லைக் கலத்தில் சேர்ப்பார்கள் (3) வேந்தர்கள் வேலாளரைப் பெறுமைப் படுத்தினர் (4) இது மரத்து வேறாகும். (5) நெல் வேரு.

12. வீட்டு வேலை

புதிய சொற்கள் :—கோபாலன்—காலைக்கடன்கள்—முடித்துக் கொண்டு—அன்றாடம்—முடிய—அன்புள்ள—உணவு-படைக்கிறார்—படைப்பதை — போதிக்கும்—ஓய்வு — வேறு—சிட்டு—மளிகைக் கடை—செல்கிறேன்—கடமையான—பெற்றோர்—நடத்துகின்றனர்.

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் **கோபாலன்.** நான் தினந்தோறும் காலை 5-30 மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கிறேன். நான் உடனே கடவுளைத் தொழுகிறேன். பிறகு நான் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு குளிர்ந்த நீரில் நீராடுகிறேன்.

நான் தூய ஆடைகளை உடுத்துகிறேன். நான் என் அன்றாடப் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கிறேன்; உபாத்தியாயர் கொடுத்த கணக்குகளைப் போடுகிறேன்; கையெழுத்துப் பாடம் எழுதுகிறேன். இவை முடிய காலை 8-30 மணி ஆகும்.

என் அன்புள்ள தாயார் எனக்கு உணவு படைக்கிறார். நான் அவர் படைப்பதை உண்கிறேன்; உண்ட பின் என் தங்கையுடன் விளையாடுகிறேன்; மணி 9-30-க்குப் புறப்பட்டுப் பள்ளிக்கூடம் போகிறேன்.

நான் பள்ளிக்கூட நேரத்தில் பிள்ளைகளோடு பேசுவதில்லை; ஆசிரியர் போதிக்கும் பாடங்களையே கவனிக்கிறேன்; நான் மாலை 4-30 மணிக்கு நேராக வீடு செல்கிறேன்; வீட்டுத்தோட்டத்தில் என் தங்கையுடன் விளையாடுகிறேன்; என் தாயார்—தகப்பனாருடன் தோட்ட வேலை செய்கிறேன்.

நான் ஓய்வு நேரங்களில் என் தாயார் இடும் வேறு வேலைகளையும் செய்கிறேன்; கடைக்குப் போகிறேன்; என் தாயார் எழுதித் தரும் சீட்டில் உள்ள பொருள்களை வாங்கி வருகிறேன்; மாதம் ஒருமுறை என் தகப்பனருடன் சென்று மளிகைக் கடைச் சாமான்களை வாங்கி வருகிறேன்; தகப்பனர் ஊரில் இல்லாதபோது நானே மளிகைக் கடைக்குச் செல்வேன்.

நான் இப்படி நாள்தோறும் என் கடமையான வேலைகளைச் செய்கிறேன். அதனல் என்னை என் பெற்றோரும் ஆசிரியரும் அன்புடன் நடத்துகின்றனர். என் வகுப்பு மாணவரும் என்னை நேசிக்கின்றனர். நீங்கள் என்னைப் போல நடக்கிறீர்களா?

கேள்விகள்

1. கோபாலன் காலையில் என்னென்ன வேலைகளைச் செய்கிருன்?
2. அவன் பள்ளிக்கூடத்தில் என்ன செய்கிருன்? என்ன செய்வது இல்லை?
3. அவன் மாலையில் என்ன வேலை செய்கிருன்?
4. அவன் செய்யும் வேறு வீட்டு வேலைகள் எவை?
5. அவனை ஏன் எல்லோரும் விரும்புகிருர்கள்?
6. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:-

(1) நான்——நேரத்தில்——பேசுவதில்லை.

(2) நான்——நேரங்களில் என் தாயார்——வேலைகளைச்——.

(3) என் வகுப்பு——என்னை——.

2. கடமையான; காலைக் கடன்களை; தங்கையுடன்; தூய: இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. பிரித்துச் சொல்:—தங்கையுடன், நீராடுகிறேன், கடமையான, பிள்ளைகளோடு.

4. சேர்த்து எழுது:—அவன் + உடன், மரம் + பலகை, மா + காய், பலா + பழம்.

5. இப்பாடத்தில் உள்ள 'நான்' என்னும் இடங்களில் எல்லாம் 'அவன்' என்பதை வைத்துப் பாடம் படி.

6. அம்மாதிரியே 'நீ' என்பதை வைத்துப் பாடம் படி.

7. நீ இந்தப் பாடத்தில் உள்ள முற்றுப் புள்ளிகளை எண்ணிப் பார்; வாக்கியங்களையும் எண்ணிப் பார். இரண்டும் சரியாக இருக்கின்றனவா என்பதைப் பார்.

8. சுத்தமான, உணவு, உண்ணுகிறேன்—இவற்றுக்கு இதே பொருளை யுடைய வேறு சொற்களைச் சொல்.

9. முதல் இரண்டு பிரிவுகளில் உள்ள எ. ப. செ. கூறு.

10. மூன்றும்—நான்காம் பிரிவுகளில் உள்ள வினைமுற்றுகளை எழுது; அவை இன்ன காலத்தவை என்பதைக் குறி.

11. 5, 6-ஆம் பிரிவுகளில் இன்ன இன்ன பெயர்ச் சொற்கள் இருக்கின்றன என்பதைக் கூறு.

12. இப்பாடத்தில் உள்ள வாக்கியங்களை எண்ணிச் சொல்.

13. கோவூர் கிழார்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள்:—கோவூர் — கிழார் — புலவர் — புலமை— மரியாதையுடன்—கிள்ளி வளவன்—திருக்கோவலூர்—மலையமான்— புரிந்தான்—சோழன்—பகைமை—ஏற்பட்டது—பழிவாங்க—சிக்கிக் கொண்டனர்—தீமை—கேள்விப்பட்டார் — உருக் கொண்டவர்— இத்தகைய—கல்வி கேள்விகள்—உறைக்கும்படி—புரவலன்—சேர்ப் பித்தான்—உபதேசம்—வழங்கினான்.

கோவூர் கிழார் என்பவர் ஒரு தமிழ்ப் புலவர். தமிழில் புலமை உடையவர் புலவர் எனப்படுவார். அவர் நற் குணங்கள் உடையவர். அரசர்கள் அவரை மரியாதை யுடன் நடத்தி வந்தார்கள். அவர்கள் அவர் கூறியபடியே செய்தும் வந்தனர்.

அவர் காலத்தில் சோழ நாட்டைக் **கிள்ளி வளவன்** என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் திருக்கோவலூரை **மலையமான்** என்னும் அரசன் அரசு புரிந்தான். சோழனுக்கும் மலையமானுக்கும் பகைமை ஏற்பட்டது. அது காரணமாகச் சோழன் மலையனைப் பழி வாங்கச் சமயம் பார்த்திருந்தான்.

ஒரு சமயம் மலையமான் மக்கள் இருவர் சோழனிடம் சிக்கிக்கொண்டனர். சோழன் அச்சிறுவரை யானைக் காலால் இடரச் செய்யக் கட்டளையிட்டான். இது எவ்வளவு கொடிய செயல்! மலையமான் சோழனுக்குப் பகைவன்; ஆனால் அவன் பெற்ற சிறுவர் செய்த தீமை என்ன?

சோழனது பாவச் செயலைக் கோவூர் கிழார் கேள்விப் பட்டார். அப்பெரியவர் அன்பே உருக்கொண்டவர். அவர் உடனே சோழனை வந்து கண்டார்; கண்டு, "அரசே, நீ உயர்ந்த குணங்களை உடையவன்; கடவுள் பக்தி நிறைந்த வன்; கல்வி கேள்விகளில் சிறந்தவன். இத்தகைய நீ, இச் சிறுவரைக் கொல்ல நினைத்தல் வியப்பைத் தருகிறதே! இச் சிறுவர் நினக்குப் பகைவரா? இவர் தந்தை நினக்குப் பகைவனா? இதனை எண்ணிச் செய்தல் நல்லது" என்று அவன் மனத்தில் உறைக்கும்படி உரைத்தார்.

புலவர் சொற்கள் புரவலன் மனத்தைக் கலக்கின. அவன் உடனே அச்சிறுவரை மலையமானிடம் சேர்ப்பித் தான்; புலவரை அவரது நல்ல உபதேசத்துக்காகப் பாராட்டினான்; பரிசுகள் வழங்கினான்.

கோவூர் கிழார் தமிழில் பல பாடல்களைப் பாடி இருக் கிறார். அவை மிகச் சிறந்த பாடல்கள். நீங்கள் பெரியவர் களானபின் அவற்றைப் படிக்கத் தவறாதீர்கள்.

கேள்விகள்

1. கோவூர் கிழார் யார்? அவரைப் பற்றி நீ யாது அறிவாய்?
2. கிள்ளிவளவன், மலையமான்—யாவர்?
3. கிள்ளிவளவன் செய்ய இருந்த கொடுஞ் செயல் யாது?
4. புலவர் அதனை எப்படித் தடுத்தார்?
5. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாக வாசி; கடின பதங் களை எழுது.

2. பிரிவுகளுக்குத் தலைப்புக் கொடு.

3. இந் நிகழ்ச்சியைச் சுருக்கி எழுது.

4. புலமை—பாண்டித்யம், வழங்கினான்—கொடுத்தான், சமயம்—வேளை, தீமை—கெடுதி.

இவை ஒரே அர்த்த முடைய இரண்டு சொற்கள். இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

5. பகைமை, கேள்விப் பட்டார், சேர்ப்பித்தான், உபதேசம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

6. உறை, உரை; இறை, இரை; கறை, கரை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

7. இப்பாடத்தில் உள்ள இடப் பெயர்களைக் கூறு.

8. முதல் மூன்று பிரிவுகளில் உள்ள எ. ப. செ. கூறு.

9. வருகிறான், போனான், பார்ப்பான், சேர்ந்தான், செல்கிறாள், பேசுவார்—என்ன கால வினைமுற்றுகள் ?

10. (1) இராமன் **வந்தான்.**
(2) இராமன் **வந்து** போனான்.
(3) **வந்த** இராமன்.

(1) இவற்றுள் **வந்தான்** என்பது பொருள் முடிந்த வினைச் சொல் (**வினைமுற்று**).

(2) **வந்து**—என்பது பொருள் முடியாத வினைச்சொல் (**எச்சம்**). இது 'போனான்' என்னும் வினைச்சொல்லைத் தழுவுகிறது.

ஆதலால் இது **வினையெச்சம்** எனப்படும். (3) **வந்த**—என்பதும் பொருள் முடியாத வினைச்சொல் (**எச்சம்**). ஆனால், இது 'இராமன்' என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவுகிறது. அதனால் இது **பெயர் எச்சம்** எனப்படும்.

புலவர் வந்தார்—வினை முற்று.

புலவர் வந்து போனார்—வினை யெச்சம்.

வந்த புலவர் —பெயர் எச்சம்.

இவ்வாறு, இப்பாடத்தில் வந்துள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சம் இவற்றைக் கண்டு பிடி; அவற்றைக் கட்டம் போட்டு எழுது.

எண்	வினை முற்று	வினை யெச்சம்	பெயர் எச்சம்
1.			
2.			
3.			
4.			

11. இப்பாடத்தில் உள்ள பொருட்பெயர், இடப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர்களைச் சொல்; கட்டம் போட்டு எழுது.

12. இரண்டாம் பிரிவில் உள்ள மூன்று கால வினை முற்றுகளை யும் கூறு.

14. கைத்தொழில் படங்கள்

படம் பார்த்து விஷயத்தைச் சொல் :




501
501

பயிற்சி

1. ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒன்று—இரண்டு வாக்கியங்கள் சொல்.

2. பதினாறு படங்களிலுமிருந்து நீ அறிவதைச் சேர்த்துச் சொல்; அதனை எழுது.

3. பனைமரத்தைப் பற்றிய தொழில்களைக் கூறு.

4. பனைமரத்தைப் பற்றி 4 பிரிவுகளில் விஷயம் எழுது.

5. வாழை மரத்தைப் பற்றி 3 பிரிவுகளில் விஷயம் எழுது.

6. முருகன் வந்து போனான், வந்த பையன் சிரித்தான், சிரித்த பெண் பாடினாள், பாடிவந்த பெண் ஓடினாள்.—இவற்றுள் (1) வினைமுற்றுகள் எவை? (2) வினையெச்சங்கள் எவை? (3) பெயர் எச்சங்கள் எவை?

7. கண்ணன் குழல் ஊதினான், கந்தன் பாடம் படித்தான், கண்ணகி பாட்டுப் பாடினாள், வள்ளி கோலம் போட்டாள்.—எ. ப. செ. கூறு.

8. நாய்கள் காட்டைக் கடந்து போகையில் வாலை ஆட்டின; குரங்குகள் வெண்மையான சுவரில் மஞ்சள் வர்ணம் அடித்தன; நேற்று வந்த பையன் இன்று வருவான்.—இதில் உள்ள பொருள், இடம், காலம், சினை, குணப் பெயர்களைச் சொல்.

9. 8-ஆம் கேள்வியில் உள்ள வாக்கியங்களில் இருக்கும் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

15. தமிழ்த் தாய்

புதிய சொற்கள் :—முடி - மூவேந்தர் - முத்தமிழ் - படி - பைந் தமிழ் - அம்மானை - தழைத்தோங்கா - ஆமாயின் - தழைத்தல் - சீருடைய - செந்தமிழ் - சீலம் - கற்றக்கால் - செல்கதி – நேர்ந் திலதோ - இறைவன் - நன்மொழி - நேர்உண்டோ - சிந்தாமணி - சிலம்பு - மணிமேகலை - அந்தம் - அகநூல்கள் - ஆண்மை - புகல்- அந்தாதி - ஏந்திழையீர் - ஆடாமோ - ஊசல் - தோற்றுவித்த - வல் லரசி - வாழ்கென - வளர்பிறை.

1. அம்மானை



முடியுடைய மூவேந்தர் முயற்சியினுல் முத்தமிழும்
படியிலுயர் பைந்தமிழாய்ப் பரவினகாண் அம்மானை !
படியிலுயர் பைந்தமிழாய்ப் பரவினவே ஆமாயின்,
தடையின்றித் தழைத்தோங்காக் காரணமென்? அம்மானை !
தமிழரே தமிழ்மறந்தால் தழைத்தலெங்கே? அம்மானை ! 1

சீருடைய செந்தமிழைச் சீலமுடன் கற்றக்கால்
சீர்பெறலாம் செல்கதிக்கும் சிறப்புண்டாம் அம்மானை !
சீர்பெறலாம் செல்கதிக்கும் சிறப்புண்டாம் ஆமாயின்
நேரிதற்கே வேறுமொழி நேர்ந்திலதோ ? அம்மானை !
நேருண்டோ இறைவனருள் நன்மொழிக்கே அம்மானை! 2

2. ஊசல்



சிந்தா மணிசிலம்பாம் சிறப்புமணி மேகலையாம்
அந்தமிலா அகநூல்கள் ஆண்மைபுகல் புறநூல்கள்
அந்தாதி முதலான அழகுடைய சிறுநூல்கள்
எந்தமிழில் உண்டென்றே ஆடாமோ ஊசல் !
'ஏந்திழையீர்! படியுமெ'ன்றே ஆடாமோ ஊசல்! 1
பல்லா யிரமாண்டாய்ப் பலர்புகழ நின்றுலவும்
பல்புலவர் பெற்றெடுத்தே பன்னூல்கள் தோற்றுவித்த
பல்லரசர் மடிமீது பார்புகழ வளர்ந்ததமிழ்

வல்லரசி வாழ்கெனநாம் ஆடாமோ ஊசல்!
'வளர்பிறைபோல் வாழ்க' என்றே ஆடாமோ ஊசல்! 2

3. பந்து

அகத்தியர்க்குப் பெருமைதந்த அரியதமிழ் அன்னையை
சகத்திலுயர் மொழிஎனவே சஞ்சரிக்கும் தாயினை
அகத்திலன்பு பொங்கவாழ்த்தி ஆடிப்பந் தடித்துமே;
அரிச்சிலம்பு ஆர்ப்பெடுப்ப ஆடிப்பந் தடித்துமே. 1

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம்குற்ற மேஎனப்
பற்றிலா துரைத்தகீரன் பைந்தமிழைப் பாடியே
நெற்றிவேர்வை நிலத்திற்சிந்த ஆடிப்பந் தடித்துமே;
வெற்றித்தமிழ் வாழ்கெனநாம் வாழ்த்திப்பந் தடித்துமே. 2

—வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.

குறிப்பு:—அம்மானை—மூன்று பெண்கள் கூடி ஆடும் ஆட்டம்.

ஊசல்—ஊஞ்சல் ஆடுகையில் பாடுதல்.

பந்து—பாடிக்கொண்டே பந்தாடுதல்.

அரும்பொருள்:—(1) முடி - கிரீடம், மூவேந்தர் - சேர சோழ பாண்டியர், முத்தமிழ் - இயல், இசை, நாடகம்; படி - உலகம், பைந் தமிழ் - செழிப்புள்ள தமிழ், தழைத்தல் - வளருதல், (2) சீர் - சிறப்பு, சீலம் - அறிவு, கற்றக்கால் - படித்தால், செல்கதி - அடுத்த பிறவி, நேர் - சமானம், நேர்ந்திலதோ - உண்டாக இல்லையோ?, இறைவன் - சிவபெருமான், மொழி - பாஷை. (1) சிந்தாமணி, சிலப் பதிகாரம், மணிமேகலை; அகப்பொருள், புறப்பொருள் நூல்கள், அந்தாதி நூல்கள் - இவை யாவும் தமிழ் நூல்கள்; ஏந்து இழை யீர் - ஏந்தலாக உள்ள நகைகளை அணிந்தவரே! படியும்—படியுங்கள். (2) ஆண்டாய் - வருஷங்களாய், தோற்றுவித்த - உண்டாக்கின, வல் - பலமுள்ள, (1) அகத்தியர் - தமிழில் பெரிய இலக்கண நூல் செய்தவர், சகம் - உலகம், அரிச் சிலம்பு—மணிகளை உள்ளடக்கிய சிலம்பு, ஆர்ப்பு - ஓசை, கீரன் - நக்கீரன் (கடைச் சங்கத் தமிழ்ப் புலவர்; இவர் சிவபிரானோடு வாதிட்டுக் கூந்தல் இயற்கை மணம் உடையதன்று என்றவர்.), வெற்றித் தமிழ் - ஜயத்தை ஊட்டும் தமிழ்.

பயிற்சி

1. புகழ, வாழ்ந்த, சிந்தாமணி, இறைவன், தடையின்றி - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. இப் பாடத்தில் உள்ள வினைமுற்றுகளைச் சொல்.

3 செந்தமிழ் = செம்மை + தமிழ்,

பைந்தமிழ் = பசுமை + தமிழ்.

இவை போன்ற சொற்களை இப் பாடத்தில் கண்டுபிடி.

4. இப் பாடத்தில் உள்ள ஒருமை - பன்மைகளை எழுது.

5. இப் பாடத்தில் உள்ள பொருள் - இடம் - காலம் - சினை - குணப் பெயர்களைச் சொல்.

16. வைத்தியசாலை

புதிய சொற்கள்:—வைத்தியர் - பஸ்பம் - மாத்திரை - லேகியம் – கஷாயம் - நோயாளி - ஆங்கிலப்பட்டம் - தேர்ச்சி - டாக்டர் - கம்பவுண்டர் - ட்ரெஸ்ஸர் - காச நோய் - தாதிமார் - நிருவாகம் - இலவசம் - சென்னை.



படத்தில் இருப்பவர் **தமிழ் வைத்தியர்**. இவர் பஸ்பம், மாத்திரை, லேகியம், கஷாயம் முதலியவற்றை நோயாளிகளுக்கே கொடுப்பவர். இவர் **நாட்டு வைத்தியர்** எனப்படுவார். இவர் ஆங்கிலப் பட்டம் பெற்றவர் இல்லை; ஆங்கில வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றவரும் இல்லை. முன்பு இம் மாதிரி நாட்டு வைத்தியர்களே நமது நாட்டில் இருந்தனர்.

இப் படத்தில் இருப்பவர் ஆங்கில முறை வைத்தியர். இவர் **டாக்டர்** எனப்படுவார். இவர் ஆங்கில மருந்துகளையே தருவார். இவர் நோயாளிகளைச் சோதிப்பார்; ஒரு துண்

டுக் காகிதத்தில் நோயையும் மருந்தையும், நோயாளியின் பெயர், வயது முதலியவற்றையும் குறிப்பிடுவார். அத் துண்டைக் **கம்பவுண்டர்** என்பவர் பெற்றுக்கொண்டு, துண்டில்



குறிக்கப்பட்ட மருந்தைத் தருவார். இவர் கம்பவுண்டர் பரீக்ஷையில் தேறியவர்.



இவர் அல்லாமல் காயங்களைக் கட்டவும் கழுவவும் மருந்து போடவும் **ட்ரேஸ்ஸர்** என்று ஒருவர் உண்டு. இம்மூவரைக் கொண்டதே பெரிய கிராமங்களில் உள்ள வைத்தியசாலை. சில வைத்திய சாலைகளில் பெண்களைக் கவனிக்கத் **தாதிமார்** உண்டு. பெரிய நகரங்களில் பிரசவ வைத்தியசாலை, கண் வைத்திய சாலை,

காச நோய் வைத்தியசாலை, மிருக வைத்திய சாலை, பொது வைத்தியசாலை எனப் பலவகை வைத்திய சாலைகள் உண்டு. அவற்றில் தாதிமார் பலர் உண்டு; கம்பவுண்டர் பலர் இருப்பர்; ட்ரெஸ்ஸர் பலர் இருப்பர்; டாக்டர்கள் பலர் ஆவர்.

ஜில்லா போர்டு, நகர சபை இவற்றின் நிருவாகத்தில் நடைபெறும் வைத்திய சாலைகளே கிராமங்களிலும் நகரங்களிலும் இருப்பவை. சென்னை போன்ற சிறந்த நகரங்களில் உள்ள பெரிய வைத்திய சாலைகள் எல்லாம் அரசாங்கத்தாரே நடத்தி வருகின்றனர். இந்த வைத்திய சாலைகள் அனைத்தும் ஏழைகளுக்கே பெரிதும் பயன்படுகின்றன. அவர்கள் இலவசமாக மருந்து பெறலாம்; குணம் ஏற்படும் வரையில் அங்கேயே இருக்க வசதி உண்டு. இந்த வைத்திய சாலைகள் எல்லாம் நாம் கட்டும் வரிப் பணத்தால் நடப்பனவே ஆகும்.

சிலர் சொந்தமாக நடத்தும் வைத்தியசாலைகளும் உண்டு. அவை தரும வைத்தியசாலைகளாக இருந்தால், அரசாங்கத்தார் பொருள் உதவி செய்கின்றனர். இப்படி நடைபெறும் வைத்தியசாலைகளும் சென்னையில் பல இருக்கின்றன.

கேள்விகள்

1. நாட்டு வைத்தியருக்கும் டாக்டருக்கும் என்ன வித்தியாசம்?
2. வைத்தியசாலையில் இருக்கும் வேலையாட்கள் யாவர்?
3. பெரிய நகரங்களில் என்னென்ன வைத்தியசாலைகள் இருக்கும்?
4. வைத்தியசாலைகள் யார் யாரால் நிருவகிக்கப்படுகின்றன?
5. வைத்திய சாலைகள் நாட்டிற்குத் தேவையானவையா?

பயிற்சி

1. பஸ்பம், கஷாயம், தேர்ச்சி, நிருவாகம், இலவசம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. நீ இப் பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை?

3. உங்கள் ஊரில் உள்ள வைத்தியரைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுது.

4. உனக்குத் தெரிந்த வைத்திய சாலையைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுது.

5. படிக்கும்போது கருத்து விளங்குவதற்காகச் சில இடங்களில் நிறுத்தி வாசிக்கவேண்டும் நிலைமை ஏற்படுகிறது. இந்த இடங்களில் இன்ன இன்னபடி நிறுத்த வேண்டும் என்னும் அளவு உண்டு; அதற்கு உரிய அடையாளங்களும் உண்டு. அவற்றுள் ஒன்று முற்றுப் புள்ளி. அது வாக்கியத்தின் முடிவில் இடவேண்டுவது. வாக்கியத்தின் இடையில் சில இடங்களில், (காமா) இக்குறி போட வேண்டும். வாக்கியம் நீளமாக இருந்தால், இந்தக் குறி சில இடங்களில் இடம் பெறும்.

அவன் என்னைப் பார்த்து, 'தம்பீ, நீ எங்குப் போனாய்?' என்று கேட்டான்.

(1) இதில், 'அவன் என்னைப் பார்த்து' என்பது ஒரு விஷயம்; பிறகு அவன் கேட்பது மற்றொரு விஷயம். ஆதலால், வேறு வேறு விஷயங்களைப் பிரிக்க நடுவில், காமா போட வேண்டும்.

(2) 'தம்பீ, நீ எங்குப் போனாய்?' என்பது அவன் நேரே என்னைக் கேட்ட விஷயம். ஆதலால், அது " " இந்தக் குறிகளுக்கு இடையில் நிற்கிறது. பிறர் சொல்வதை அப்படியே சொல்லும்போது இந்தக் குறிகள் " " நேர் கூற்றுக் குறிகள் போட வேண்டும்.

(3) வாக்கியம் கேள்வியாக வரும்போது கடைசியில் கேள்விக் குறியைப் போட வேண்டும்.

17. கட்டுரை எழுதுதல்

புதிய சொற்கள்:—ஒன்றைப்பற்றி — தொகுத்து—கட்டுரை — வியாசம்—உதாரணமாக—அவ்வளவில்—முடிந்துவிடும்—தயாரித்துக் கொண்டு—புகையிலை—படுகை—வளர்ச்சி—கையெழுத்து.

ஒன்றைப்பற்றித் தொகுத்து எழுதுதல் **கட்டுரை** அல்லது **வியாசம்** எனப்படும். உதாரணமாக, 'ஆறும் அதன் பயனும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதவேண்டும். இதற்கு என்ன செய்யவேண்டும்?

ஆறு என்பது என்ன? அதனால் என்ன நன்மைகள் உண்டாகின்றன? என்னும் கேள்விகளை நமக்குள் நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்; இவையே இந்தக் கட்டுரைக்கு உரிய குறிப்புகள் ஆகும்.

இந்த இரண்டு குறிப்புகளுக்கும் இரண்டு 'பாரா' விடை எழுத வேண்டும். அவ்வளவில் இந்தக் கட்டுரை முடிந்து விடும். இந்தக் கட்டுரையை உதாரணமாகக் கீழே எழுதுவோம்:—

ஆறும் அதன் பயனும்

குறிப்புகள்:—1. ஆறு என்பது என்ன?

2. ஆற்றால் உண்டாகும் நன்மைகள்

கட்டுரை

நிலத்தை அறுத்துச் செல்லும் நீரோட்டம் ஆறு எனப்படும். அந்த நீர் மலை முதலிய மேடான இடங்களில் பெய்யும் மழை நீரின் சேர்க்கையே ஆகும். சில ஆறுகள் அகலமாகவும் நீளமாகவும் இருக்கும். சில குறுகிய அகல

மும் குறுகிய நீளமும் உள்ளனவாக இருக்கும். சில ஆழம் உள்ளவை; சில ஆழம் இல்லாதவை.

ஆற்று நீர் கால்வாய்கள் மூலம் வயல்களுக்குப் பாய்கின்றது. உள் நாட்டு வியாபாரப் படகுகள் ஆற்றின் மூலம் பல ஊர்களை அடைகின்றன. மக்கள் நீராடவும் ஆடைகளைத் துவைக்கவும் கால் நடைகளைக் குளிப்பாட்டவும் ஆற்று நீர் உதவுகிறது. நெல், புகையிலை, பருத்தி முதலிய பயிர்கள் உள்ள வயல்களும் படுகைகளும் தோட்டங்களும் ஆற்று நீர் இல்லாவிட்டால் பயனைத் தரா.

இவ்வாறு ஒவ்வொரு கட்டுரைக்கும் குறிப்புகளைத் தயாரித்துக்கொண்டு, கட்டுரை எழுதவேண்டும். எழுதும் பொழுது வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு அச்சடித்தாற்போல எழுத்துகளை நேராக எழுதவேண்டும். நீங்கள் இவ்வாறு செய்வீர்களானால், கட்டுரை எழுதும் சக்தியும் கையெழுத்தும் நன்றாய் வளர்ச்சி அடையும்.

பயிற்சி

1. நாயைப்பற்றி 10 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.
2. பூனையைப்பற்றி 10 வரிகளில் ஒரு வியாசம் எழுது.
3. குதிரையைப்பற்றி 10 வரிகள் எழுது.
4. கோழியைப்பற்றி 10 வரிகள் எழுது.
5. உன் தம்பியைப்பற்றி 8 வாக்கியங்கள் எழுது.
6. உன் தயாரைப்பற்றி 10 வாக்கியங்கள் எழுது.
7. காகம்—வடை—நரி—காகம் 'கா—கா'—வடை கீழே விழுதல்—நரிஏமாற்றியது—காகம் ஏமாந்தது—இவற்றைத் துணைக்கொண்டு 'காகமும் நரியும்' என்னும் கட்டுரை எழுது.

8. நரி—திராக்ஷைக் குலை—குதித்தல்—எட்டவில்லை—'சீசீ, இப் பழம் புளிக்கும்'—நரி போதல்.— இக்குறிப்புக்களைக் கொண்டு, 'நரியும் திராக்ஷையும்' என்னும் பொருள் கொண்ட கட்டுரை எழுது.

9. நாய்— மாமிசத் துண்டு— ஓடை — நிழல் பார்த்தல்— வேறு நாய்—பேராசை—வாய் திறத்தல் — மாமிசம் விழுதல்— நாய் ஏமாறல்—இக்குறிப்புக்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது. அதற்குத் தலைப்பு நீயே கொடு. இக்கட்டுரையால் நீ அறியும் நீதியையும் எழுது.

10. 'ஆறும் அதன் பயனும்' என்னும் கட்டுரையில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?

11. அந்த வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கூறு.

12. அந்த வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றைக் கட்டம் போட்டு எழுது.

18. பொய் சொன்ன பொன்னப்பன்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள்:—சிங்காரவேலர் — பிரபு — அன்னக்கிளி— பொன்னப்பன் — கண்ணாடி—உடைந்துவிட்டது — புண்பட்டது— நீர்த்துளிகள்-முற்றிலும் - வெறுத்தார்-வருந்துவதை - குற்றத்தை - பிழையை—வேண்டினான்.

சென்னையில் சிங்காரவேலர் என்னும் பிரபு ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் அன்னக்கிளி என்பவர். இவ்விருவருக்கும் பிறந்தவன் பொன்னப்பன். பொன்னப்பன் நான்காம் வகுப்பு மாணவன். அவன் ஒரு நாள் பந்து விளையாடுகையில், அறைக் கண்ணாடிமீது பந்து பட்டுக் கண்ணாடி உடைந்து விட்டது.

தாயார் அதைப்பற்றிக் கேட்டபோது, பொன்னப்பன் தான் உடைக்கவில்லை என்று பொய் சொன்னான். அவன் எறிந்த பந்தே கண்ணாடியை உடைத்து விட்டது என்பதைத் தாயார் நன்கு அறிவார். ஆகவே, பொன்னப்பன் பொய் பேசினான் என்பது அவருக்குத் தெரியும். அதனால் அவர் மனம் புண்பட்டது. அவர் கண்கள் நீர்த்



துளிகள் சிந்தின. தம் மகன் நல்லவனாக இருந்தும், பொய் பேசியதை அவர் முற்றிலும் வெறுத்தார்.

பொன்னப்பன் தன் தாயார் வருந்துவதைக் கண்டான். அவன் அப்பொழுதுதான் தன் குற்றத்தை உணர்ந்தான்; தன் தாயாரிடம் சென்று அழுதான்; "அம்மா, நான் எறிந்த பந்தே கண்ணாடியை உடைத்து விட்டது. நான் உங்களுக்குப் பயந்து பொய் சொன்னேன். என் பிழையை மன்னிக்க வேண்டும்," என்று வேண்டினான்.

தாயார் மகனைப் பார்த்து, "தம்பீ, நீ செய்தது தவறு; அதை மறைக்கப் பொய் பேசினாய். உன் குற்றத்தைக்

கடவுளிடம் சொல்லி மன்னிப்புப் பெறு. நீ இனிப் பொய் பேசுவதில்லை என்பதைக் கடவுளிடம் கூறு'' என்றார்.

பொன்னப்பன், தயார் முன்பே நின்று, இரண்டு கைகளையும் கூப்பினான்; கண்களை மூடினான்; "கடவுளே, நான் இனிப் பொய் சொல்லமாட்டேன். நான் முன் பொய் பேசியதை மன்னிக்க வேண்டும்'' என்று கடவுளை வேண்டினான். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்து ஓடியது. அந்த நிலையில், தாயார் அவனை அணைத்து முத்தமிட்டார். ஆ! அப்போது பொன்னப்பன் முகம், அப்பொழுது மலர்ந்த தாமரை மலரைப் போல விளங்கியது. அவன் அதுமுதல் பொய் பேசுவதே இல்லை.

கேள்விகள்

1. பொன்னப்பன் செய்த தவறு யாது ?
2. அவன் தாயார் என்ன செய்தார் ? ஏன் ?
3. பொன்னப்பன் யாரிடம் மன்னிப்புப் பெற்றான் ? எப்படி?
4. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துச் சொல்:—

(1) பொன்னப்பன்———வகுப்பு———.
(2) நான்———பந்தே———உடைத்து விட்டது.
(3) நான்———ப் பயந்தே பொய்———.

2. குற்றம், வெறுத்தார், புண்பட்டது, நீர்த் துளிகள்.— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

3. முதல் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கூறு.

4. இரண்டாம் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.

5. மூன்றும் பிரிவில் உள்ள வினைமுற்றுகள் என்ன காலத்தன? அவற்றுக்கு வேறு இரண்டு கால வினைமுற்றுகளையும் சொல்.

6. நான்காம் பிரிவில் உள்ள முற்றுப் புள்ளிகள் எத்தனை?

7. ஐந்தாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

8. நீ பொன்னப்பனாக இருந்து இச் சம்பவத்தைச் சொல்.

9. நீ தாயாராக இருந்து இதனைச் சொல்.

10. நீ தகப்பனாராக இருந்து இதைக் கூறு.

11. இச்சம்பவத்தை நிகழ்கால வினைமுற்றுகளைத் தந்து கூறு.

12. இதனையே எதிர்கால வினைமுற்றுகளைத் தந்து சொல்.

13. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.

14. இச்சம்பவத்தைச் சுருக்கி எழுது.

19. கடிதங்கள்

புதிய சொற்கள்:— தலைவலி - தயவு செய்து - நகரசபை - தமிழ் அரசி - சேலத்தில் - கோடை - விடுமுறை - நலம் - தேர்விற்கு - முதன்மையாக - தஞ்சாவூர் - பிரஹதீஸ்வரர் - சிவாலயம் - நந்தி — அகழி - மஹாராஷ்டிரர் - அரண்மனை - பொலிவுடன் - மாட மாளிகை - கூட கோபுரம் - சரஸ்வதி மஹால் - ஓலைச்சுவடி - நூல் நிலையம் - இராஜ வீதி - அகன்ற - ஆழமான - அழிந்து விட்டது - மிகுந்து - ஆபிரகாம் பண்டிதர்.

1

ஆசிரியருக்கு எழுதும் கடிதம்

120, தங்கசாலை வீதி,
சென்னை, 15-10-'41.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஐயா,

எனக்கு இன்று காலை முதல் தலைவலி அதிகமாக இருக்கிறது. ஆதலால் நான் பள்ளிக்கூடம் வரக் கூடவில்லை. தாங்கள் தயவு செய்து எனக்கு இன்று விடுமுறை தரும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவி,
கோகிலம்.

விலாசம் :—

நான்காம் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு,
நகரசபைப் பாடசாலை, தங்கசாலைத் தெரு, சென்னை.

2

நான் தமிழ் அரசிக்கு எழுதிய கடிதம்

[தமிழ் அரசி என் அத்தை மகள்; அவள் சேலத்தில் நான்காம் வகுப்பில் படிக்கிறாள்; அவளைக் கோடை விடுமுறையில் தஞ்சாவூர் வரும்படி இக்கடிதம் எழுதுகிறேன்.]

10, கிழக்கு ராஜ வீதி,
தஞ்சாவூர், 10-3-'41.

அன்புள்ள தமிழ் அரசி,

நலம். நலம் அறிய ஆசை. என் பள்ளிக்கூடம் ஏப்ரல் மாதம் 15-ஆந் தேதி முதல் கோடை விடுமுறைக்காக மூடப்

படும். நான் வருஷத் தேர்விற்கு நன்ருய்ப் படித்து வருகி றேன். நீயும் நன்ருய்ப் படிக்கிருய் என்று நினைக்கிறேன். நாம் இருவரும் இந்தத் தேர்வில் முதன்மையாகத் தேறவேண் டும்; தேருவிடில் நம்மவர் நகைப்பர்.

நீ, கோடை விடுமுறையில் தஞ்சாவூருக்கு வா. இங்கு **இராஜராஜ சோழன்** கட்டின பிரஹதீஸ்வரர் சிவாலயம் இருக் கிறது. அது உலகப் புகழ் பெற்ற கோவில். அதில் ஒரே கல்லால் ஆன நந்தி இருக்கிறது. கோவிலை அடுத்துப் பெரிய அகழி இருக்கின்றது. மஹாராஷ்டிர அரசர்கள் வாழ்ந்த அரண்மனை பொலிவுடன் விளங்குகிறது. அது ஏழு அடுக்கு மாடிகளை உடையது. அரண்மனைக்குள் மாடமாளிகை களும் கூட கோபுரங்களும் இருக்கின்றன. அவை பார்க்கத் தக்கவை. சரஸ்வதி மஹால் என்னும் ஓலைச் சுவடி நூல் நிலையம் ஒன்றும் அந்த அரண்மனையில் இருக்கிறது.

அரண்மனைக்கு வெளியே நாற்புறமும் நான்கு பெரிய தெருக்கள் உண்டு. அவை இராஜ வீதிகள் எனப்படும். அவற்றுக்கு வெளியே அகன்ற ஆழமான அகழி உண்டு. அதன் முக்கால் பாகம் அழிந்துவிட்டது; என்ருலும், மிகுந்து இருப்பது பார்க்கத் தக்கது. ஊருக்கு வெளியே ஆபிரகாம் பண்டிதர் தோட்டம் இருக்கிறது. அது ஓர் அழகான பெரிய தோட்டம். நீ அதனை அவசியம் பார்க்க வேண்டும். நீ, மேலும் பார்க்கத்தக்க இடங்கள் பல உண்டு. ஆதலால் நீ தவருமல் வந்துவிடு. மற்றவை நேரில் பேசுவோம்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
அன்னக்கிளி.

விலாசம் :—

மா. தமிழ் அரசி,
நான்காம் வகுப்பு மாணவி,
நகரசபைப் பள்ளிக்கூடம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

கேள்விகள்

1. நீ எழுதும் கடிதத்தில் உன்னைப் பற்றி என்னென்ன தெரிவிக்க வேண்டும் ?
2. தமிழ் அரசியின் விலாசம் என்ன ?
3. அன்னக்கிளியின் விலாசம் யாது ?
4. கோகிலத்தின் விலாசம் என்ன ?
5. ஆசிரியர் விலாசம் யாது ?
6. அன்னக்கிளி தன் கடிதத்தில் என்னென்ன எழுதி இருக்கிறாள் ?

பயிற்சி

1. நீ, கோடை விடுமுறையில் உன் ஊருக்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
2. நீ தசரா விடுமுறையில் கண்ட காட்சிகளைக் குறிப்பிட்டு உன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுது.
3. அன்னக்கிளியின் கடிதத்துக்குத் தமிழ் அரசி பதில் எழுதுவதைப் போல நீ எழுது.
4. தீபாவளிப் பண்டிகையைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

20. நம் நாட்டுப் பெரியார்

புதிய சொற்கள் :—மதன்மோகன் மாளவியா - இந்தியர் - இனியவர் - இரக்கம் - மிக்குடையார் - பாவலர் - காசி - கலைக் கூடம் - கலாவல்லர் - பேதம் - அற்ருேர் - சமரஸத்தார் - பட்டவற்றை - சாதிப்பவர் - வழுவாதார் - என்புருக - இசைவையோ.

இங்கிருப்போர் **மதன்மோகன் மாளவியா;** தம்பீ!
இந்தியரே இனியவரே இரக்கமுள்ளார்; தம்பீ!
பொங்குபுகழ் மிக்குடையார் பொறுமையுள்ளார்; தம்பீ!
பன்னூல்கள் படித்துணர்ந்த பாவலராம்; தம்பீ! 1.

காசியிலோர் கலைக்கூடம்[1] கண்டவராம்; தம்பீ!
கருத்துடனே கலைக்கூடம் காக்கின்ருர்; தம்பீ!
பேசுவதில் சமர்த்தரெனப் பெயரெடுத்தார்; தம்பீ!
பெரியகலா வல்லர்இவர் பெருமையுள்ளார்; தம்பீ! 2.

சாதிமத பேதமற்ருேர் சமரஸத்தார்; தம்பீ!
சரிஎன்று பட்டவற்றைச் சாதிப்பவர்; தம்பீ!
நீதிநெறி வழுவாதார் நிபுணர்இவர்; தம்பீ!
நிதம்கடவுள் நினைவினிலே நிலைத்திருப்போர்; தம்பீ! 3.

ஆங்கிலம்பே சுவதிலிவர் அதிசமர்த்தர்; தம்பீ!
அரும்புலவர் வடமொழியில் ஹிந்தியிலும்; தம்பீ!
பாங்குடைநம் தாய்நாட்டுப் பற்றுடையார்; தம்பீ!
பளிங்குமனம்[2] உடையவரிப் பண்டிதரே; தம்பீ! 4.

ஏழுபத்து வயதெனினும் இளைஞர்இவர்; தம்பீ!
எப்போதும் பொதுமக்கட் குழைப்பவரே; தம்பீ!
ஏழ்மையுடை இந்தியரை எண்ணுபவர்; தம்பீ!
எல்லோரும் நலமடைய விரும்புபவர்[3]; தம்பீ! 5.

'அன்பொன்றே தெய்வம்'என அறைகுபவர்; தம்பீ!
'அரசனும்ஆண் டியும்ஒன்றே, அறிக'என்பார்; தம்பீ!
என்புருக அன்புசெய்யும் இயல்புடையார்; தம்பீ!
இவர்போலும் தொண்டுசெய்ய இசைவையோநீ? தம்பீ! 6.

—**வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.**

அரும்பொருள் :—

1. காசி ஹிந்து சர்வகலாசாலை, 2. கள்ளம் கபடு இல்லாத மனம் உடையவர், 3. காங்கிரஸ் மஹா சபை, வட்டமேஜை மஹா நாடு முதலியவற்றில் பெரும் பங்கு கொண்டு உழைத்தவர்.

கண்டவர் - ஏற்படுத்தியவர், கலாவல்லர் - கலைகளில் வல்லவர், சமரஸம் - சமமாக நோக்குந் தன்மை, அறைகுபவர் - சொல்பவர், என்பு - எலும்பு, இசைவையோ - சம்மதிப்பாயோ?

கேள்விகள்

1. மதன்மோகன் மாளவியா செய்துள்ள தொண்டுகள் எவை?

2. அவருடைய நல்ல இயல்புகள் எவை?

3. நீ அவருடைய வரலாற்றால் அறிவன யாவை?

4. நீ அவரைப்போலப் பெருமை அடைய என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

1. மாளவியாவைப்பற்றி ஒரு கட்டுரை 10 வாக்கியங்களில் எழுது.

2. உனக்குத் தெரிந்த வேறு எவரைப்பற்றியேனும் 6 வாக்கியங்களில் ஒரு கட்டுரை எழுது.

3. வருதல், போதல், தூங்குதல், படித்தல்,—இவை தொழிலைக் குறித்து வரும் பெயர்கள். ஆதலால் இவை **தொழிற் பெயர்கள்** எனப்படும்.

கிளி, வீடு, நாள், கை, வெண்மை, வருதல் - என்ன பெயர்கள்?

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி :—

1. நான் —— பாடம் —— .
2. நீ —— ஓடுவாய்.
3. அவன் ———— பாடுவான்.
4. அவள் ——— கோலம் ——— .
5. அவர்கள் வேகமாய் ——— .
6. எலி மூட்டையைக் ——— .

5. உண்டு - இல்லை, வேண்டாம் - வேண்டும், சரி - தவறு : இவற்றைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி :—

1. வாழைக்குக் கிளைகள் —— .
2. ஆல மரத்துக்குக் ——— .
3. எனக்கு வாழைப் பழம் ———— .
4. எனக்கு வேப்பம் பழம் ——— .
5. நீ செய்தது ——— .
6. அவன் பாடசாலை போகாதது —— .

21. மதுரை மாநகரம்

புதிய சொற்கள் :—சேர நாடு - சோழ நாடு - பாண்டிய நாடு - முறையே - மதுரை - இரண்டாயிரம் - மூவேந்தருள் - சங்கம் - செய்வித்தார்கள் - குலதெய்வம் - சோமசுந்தரக் கடவுள் - சொக்கேசர் - சொக்கலிங்கம் - மீனாக்ஷி - வையை - இராவிடினும் - வற்றுமல் - பண்டை - திருமலை நாயகர் - மஹால் - சிவபக்தர் - மங்கம்மாள் - அன்ன சத்திரம் - சுருங்க - வளர்ப்பிடம் - பாராட்டத் தக்க - மாகாணம் - இராமேஸ்வரம்.

தமிழ் நாடு மூன்று பிரிவுகள் கொண்டது. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. அவற்றை

அரசாண்ட அரசர் முறையே சேரர், சோழர், பாண்டியர் ஆவர். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் மதுரை



பாண்டியர் தலைநகரமாக இருந்தது. அது சிறப்புற்று விளங்கியதால் 'மா நகரம்' எனப்பட்டது.

இந்த மதுரை மாநகரம் தமிழை வளர்த்த பெருமை உடையது. மூவேந்தருள் தமிழை அதிகமாக வளர்த்தவர் பாண்டியரே ஆவர். அவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம்

ஒன்றை ஏற்படுத்தினார்கள்; தமிழ் நாட்டில் இருந்த சிறந்த புலவர்களைக் கூட்டினார்கள்; பல தமிழ் நூல்களைச் செய்வித்தார்கள்; தமிழ்ப் புலவர்களுக்குக் குறைவு இல்லாமல் பொருள் உதவி செய்தார்கள்.



பாண்டியர்க்குக் குலதெய்வம் மதுரை-சோமசுந்தரக் கடவுளே ஆவர். அக்கடவுள் சொக்கேசர் என்றும், சொக்கலிங்கம் என்றும் அழைக்கப்படுவர். 'சொக்கு' என்பதற்கு 'அழகு' என்பது பொருள். அம்மன் பெயர் மீனாக்ஷி என்பது. மீனாக்ஷி என்பதற்கு மீன் கண்ணி (மீன் போன்ற கண்ணை உடையவள்) என்பது பொருள். மதுரை-மீனாக்ஷி அம்மன்

கோவில் இந்தியாவில் பெயர் பெற்றதாகும். அது பாண்டிய மன்னரால் பழங்காலத்தில் கட்டப்பட்டது.

புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட வையை என்னும் பெரிய ஆறு மதுரையில் ஓடுகின்றது. அதில் இக்காலத்தில், அதிக நீர் இராவிடினும், பழைய காலத்தில் நீர் வற்றாமல் இருந்து வந்தது. பண்டைத் தமிழர் வையையைப் பெண் தெய்வமாகக் கொண்டாடி வந்தனர்; ஆற்று வெள்ளம் வந்தபோது, அந்த நாட்களை விழா நாட்களாகக் கொண்டாடி வந்தனர்.

மதுரையைப் பிற்காலத்தில் ஆண்டவர் **திருமலை நாயகர்.** அவர் சிறந்த சிவ பக்தர். அவர் கட்டிய அரண்மனை அவர் பெயருடன் இன்றும் இருக்கிறது. அது **திருமலை நாயகர் மஹால்** எனப்படும். அது பார்க்கத் தக்கது. அவருக்குப் பின் அரசாண்ட இராணி - **மங்கம்மாள்** என்பவர், மதுரை முதல் இராமேஸ்வரம் வரை அன்ன சத்திரங்கள் கட்டினார்; 'மங்கம்மாள் சத்திரம்' என்பது மதுரையில் பெயர் பெற்றது.

சுருங்கக் கூறின் மதுரை, தமிழ்த் தாயின் வளர்ப்பிடம்-அவள் வளர்ந்த தொட்டில் - அவள் வளர்ந்து விளையாடிய பூஞ்சோலை - தமிழராகிய நாம் பாராட்டத் தக்க பெருங் கோவில் என்னலாம். நமது சென்னை மாகாணத்தில் உள்ள பெரிய நகரங்களில் மதுரை ஒன்றாகும்.

கேள்விகள்

1. மூன்று நாடுகள் எவை? அவற்றுக்கு உரியவர் யாவர்?
2. மதுரை யாருடைய தலைநகரம்? அதன் சிறப்பு யாது?
3. தமிழ்ச் சங்கம்—என்பது யாது?

4. மீனாக்ஷி அம்மன் கோவிலைப்பற்றி யாது தெரியும்?

5. திருமலை நாயகர், மங்கம்மாள் இவர்கள் செய்த வேலைகள் எவை?

6. தமிழருக்கு மதுரை எப்படிச் சிறந்ததாகும்?

7. மதுரையில் இன்று காணத்தக்க இடங்கள் எவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:-

(1) மதுரை ———த் தாயின் ———.

(2) வையை ———பெரிய——— ———ஓடுகின்றது.

(3) மதுரை ———அம்மன்———இந்தியாவில்———.

2. வற்றாமல், சுருங்க, முறையே, குலதெய்வம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. முதல் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.

4. இரண்டாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சங்களைக் கூறு.

5. மூன்றாம் பிரிவில் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களைக் கூறு.

6. இப்பாடத்தில் வந்துள்ள ஆறுவகைப் பெயர்ச் சொற்களையும் கட்டம் போட்டு எழுது.

7. நான்காம் பிரிவில் உள்ள வினைமுற்றுகளைச் சுட்டிக் காலத்தையும் குறி.

8. இப்பாடத்தில் உள்ள ஆண்பால் பெயர், பெண்பால் பெயர்களை எழுது.

1. சோமசுந்தரர்—ஆண்பால் பெயர்; 2. மீனாக்ஷி—பெண்பால் பெயர்; 3. பாண்டியர்—பலர்பால் பெயர்; 4. சத்திரம்—ஒன்றன் பால் பெயர்; 5. சத்திரங்கள்—பலவின் பால் பெயர். இவை ஐந்து பால்கள் எனப்படும்.

9. இப்பாடத்தை மௌனமாக வாசி; ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.

22. கதைப்படம்

படம் பார்த்துக் கதை சொல்:—

(காக்கையும் பாம்பும்)



பயிற்சி

1. இக் கதையை 12 வாக்கியங்களில் எழுது.
2. இக்கதையைக் காக்கை கூறுவது போலக் கூறு.
3. இதனைப் பாம்பு கூறுவது போலக் கூறு.
4. இதனை இராணி கூறுவது போலக் கூறு.
5. இக்கதைக்குத் தலைப்புக் கொடு.
6. இக்கதையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து எழுது.
7. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.
8. நீ இக் கதையால் அறியும் நீதி யாது ?
9. முருகன் வள்ளியோடு மயில்மீது போகையில், வேடர்கள் நாய்களோடு வந்தனர்.—

   (i) இவ்வாக்கியத்தில் உள்ள எ. ப. செ. கூறு.

   (ii) இதில் உள்ள ஐந்து பால்களையும் கூறு.

10. கண்ணன், கிளி, பள்ளிக்கூடம், ஆறு, வெண்மை, கருமை, ஆவணி, தை, தலை, கால், வால், கிளை, இலை—இவை என்னென்ன பெயர்கள் ?

11. இராமன் சீதையை மணந்தான், கண்ணன் கம்சனைக் கொன்றான், வள்ளி தினைப்புனம் காவல் காத்தாள், இராவணன் சிவபெருமானைப் பூசித்தான், பாண்டியர் தமிழை வளர்த்தனர்— இவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.

23. எங்கள் உல்லாசப் பிரயாணம்

புதிய சொற்கள்:—எழும்பூர்—புகைவண்டி நிலையம்—திருக்கழுக் குன்றம்—அமர்ந்தேன்—உதவியாக — ஏற்றுக்கொண்டோம் — நிய மிக்கப்பட்டனர் — செங்கற்பட்டு — ஸ்டேஷன் — பிரசாதம்—ஒரு பகுதி—உச்சி—முருகக் கடவுள்—பிரதேசம் — மூலிகைகள்—உல் லாஸப் பிரயாணம்—நம்பிக்கை.

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் சோம சுந்தரன். நான் நவராத்திரி விடுமுறையில் என் ஆசிரியருடனும் மற்ற வகுப்புப் பிள்ளைகளுடனும் சென்னையை விட்டுப் புறப்பட்டேன். நாங்கள் திருக்கழுக் குன்றம் செல்லப் புறப்பட்டோம்; நேராக எழும்பூர்—புகை வண்டி நிலையத்தை அடைந்தோம்; எங்களுக்கென்று இருந்த தனி வண்டியில் ஏறி அமர்ந்தோம்.

ஆசிரியர், ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை கொடுத் திருந்தார். நான் அந்த அந்த இடத்து முக்கிய விஷயங் களைப் பற்றிக் குறிப்பு எடுத்துக் கொள்பவனாக அமர்ந் தேன். அப்துல்லா என்னும் மாணவன் எங்கள் பெட்டி களைக் கவனித்துக் கொண்டான். அவனுக்கு உதவியாகப் பத்து மாணவர் நியமிக்கப்பட்டனர். பணத்தை வைத்துக் கொண்டு செலவிட்டுக் கணக்கு எழுதி வைப்பவன் கோபா லன் என்பவன். நாங்கள் இப்படி ஒவ்வொருவரும் ஒரு வேலையை ஏற்றுக் கொண்டோம்.

நாங்கள் வழியில் பல காட்சிகளைப் பார்த்துக் கொண்டே செங்கற்பட்டு ஸ்டேஷனை அடைந்தோம். அங் குத் திருக்கழுக்குன்றம் போகும் மோட்டார் பஸ் காத்

திருந்தது. நாங்கள் இருபது பேரும் ஒரே பஸ்ஸில் ஏறி னேம். செங்கற்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் ஏழு மைல் தூரத்தில் உள்ளது. நாங்கள் ஒரு மணி நேரத்திற் குள் திருக்கழுக்குன்றம் அடைந்தோம். பஸ் சென்ற வழி நெடுக மலைப் பிரதேசமாகவே இருந்தது.

நாங்கள் ஒரு சத்திரத்தில் தங்கினேம்; அங்குச் சாமான்களை வைத்துவிட்டுக் குளத்திற்குச் சென்றேம்; நன்றாக நீராடினேம்; பிறகு உலர்ந்த ஆடைகளை உடுத்து மலை ஏறத் தொடங்கினேம். ஆ! அந்த மலை ஏறு வது எங்களுக்குக் கடினமாகவே இருந்தது. நாங்கள் சிரமப் பட்டு ஒருவாறு உச்சியை அடைந்தோம்; உபாத்தியாயர் எங்களுக்கு மலையைச் சுற்றியுள்ள காட்சிகளைச் சுட்டிக் காட்டினர். ஆ! அப்போது நாங்கள் மேல் உலகத்தில் இருப்பது போலவும், பூமியில் நடந்து சென்றவர் கீழ் உலகத்தில் இருப்பது போலவும் எண்ணினேம்.

மலை உச்சியில் சிறிய கோவில் இருக்கிறது. அதில் முருகக் கடவுள் இருக்கிறர். அவருக்குப் படைத்த பிரசாதத் தின் ஒரு பகுதி, அங்கு அந்நேரத்தில் நாள்தோறும் தவரு மல் வரும் இரண்டு கழுகுகளுக்குத் தரப்பட்டது. அவை தின்று சென்றவுடன் எஞ்சியது எங்களுக்குக் கொடுக்கப் பட்டது. இந்தக் கழுகுகள் தினம் வருவதே அந்த ஸ்தல விசேடம் ஆகும். அதனல், அவ்வூர் திருக்கழுக்குன்றம் எனப் பெயர் பெற்றது என்று ஆசிரியர் கூறினர். நாங்கள் வியப்பு அடைந்தோம்.

மாலையில் மலையைச் சுற்றி வந்தோம். அதனைச் சுற்றி வர எங்களுக்கு அரை மணி நேரம் ஆனது. அந்த மலை

மீது உடம்புக்கு நன்மை செய்யும் மூலிகைகள் பல இருக்கின்றனவாம். அதனல் வெளியூரார் பலர் அங்குத் தங்கிக் காலை மாலைகளில் மலையைச் சுற்றுகின்றனர். குளத்துத் தண்ணீரும் நோய்களைக் குணமாக்கும் சக்தி உடையதாம். ஊரில் முருகக் கடவுள் கோவில் ஒன்றும் இருக்கிறது. நாங்கள் அங்கும் சென்று மீண்டோம். நாங்கள் மாலை ஆறு மணிக்கு அவ்வூரை விட்டுப் புறப்பட்டோம்; இரவு ஒன்பது மணிக்கு எழும்பூர் வந்து சேர்ந்தோம்; ஆசிரியர் கட்டளைப்படி அந்த அந்தப் பிரிவில் இருக்கும் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து புறப்பட்டு, அவரவர் வீடு சென்றோம். நான் இந்தப் பிரயாணத்தை ஒரு போதும் மறவேன்; அந்தக் கழுகுகளையும்* மறவேன்; அம்மலை மீது உள்ள முருகக் கடவுளையும் மறவேன். இம்மாதிரி உல்லாஸப் பிரயாணங்கள் பல செய்வதாற்றான் மாணவர் அறிவு வளர்ச்சி அடையும் என்பது எனது நம்பிக்கை.

கேள்விகள்

1. கழுக்குன்றம்—பொருள் யாது?
2. அவ்வூரில் காணத் தக்கவை யாவை?
3. அவ்வூர்ச் சிறப்பு என்ன?
4. இத்தகைய பிரயாணம் செய்வதில் என்ன நன்மை?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப் படி; விஷயத்தைச் சுருக்கிக் கட்டுரை எழுது.

2. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.

---

* கழுகுக்குன்றம் என்பது கழுக்குன்றம் என மருவியது என்பர் அறிஞர்.

24. செய்யுளும் உரை நடையும்

புதிய சொற்கள்:— குடிமக்கள் - காட்டானை - பணிந்து - பேச லுற்றார் - யாளி - கலக்கம் - விளைத்தல் - வெய்ய - நாழி - அதம் - அகமகிழ்ந்து - மக்காள் - அகன்றார்கள் - உரை நடை - வசனம் - செங்கமலம் - விரைந்தோடி - அலங்கரித்து - அம்பறாத் தூணி - அணி வகுத்து - தமுக்கு - விசையாய் - குலமகள் - பேரரசி - திரு மகள் - பரி.

குறிப்பு:— செய்யுள் ஒன்று கீழே தரப்படுகிறது. அதன் பொருளே அதற்கு அடியில் உரை நடையில் (வசனத்தில்) தரப் படுகிறது.

அல்லி அரசியிடம் குடிகள் முறையிடல்

(செய்யுள்)

மதுரைக் குடிமக்கள் மற்றுமுள்ளார் எல்லோரும்
மாதரசி யைப்பணிந்து மனங்கலங்கிப் பேசலுற்றார்:
“ காட்டானை சிங்கங்களும் கரடிபுலி யாளிகளும்
காட்டிற்கு வெளிநின்று கலக்கம் விளைத்தலைப்பார்:
யாதுசெய்வ தென்றே எமக்குப் புரியவில்லை ”
என்றே அழுதார்கள். ஏந்திழையாள் அதுகேட்டு,
“ வேட்டைக்கு நான் போவேன் ; வெய்ய விலங்குகளை
அரைநாழிக் குள்ளே அதம்பண்ணி மீண்டிடுவேன் ;
அஞ்சாதீர் என்மக்காள் ! அகமகிழ்ந்து செல்லுங்கள் ”
என்றே உரைத்தாள். எல்லோரும் அகன்றார்கள்.

(உரைநடை)

மதுரைக் குடிமக்களும் மற்றவரும் அல்லி அரசியைப் பணிந்து, மனம் கலங்கி, "அரசியே, யானை, சிங்கம், கரடி, புலி, யாளி முதலிய விலங்குகள் காட்டிற்கு வெளியே நின்று கலக்கம் உண்டாக்குகின்றன. நாங்கள் என்ன செய்வது என்பது எங்களுக்குத் தெரியவில்லை" என்று அழுதார்கள். அல்லி ராணி அவர்களை நோக்கி, "மக்களே, நீங்கள் அஞ்ச வேண்டா. நான் வேட்டைக்குச் செல்வேன்; அவற்றை அரை நாழிக்குள் அதம் செய்வேன். நீங்கள் மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்" என்றாள். எல்லோரும் மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

குறிப்பு:—இவ்வாறே கீழ்வரும் செய்யுளை உரைநடைப் படுத்து.

அல்லி ராணி வேட்டைக்குச் செல்லல்

(செய்யுள்)

அல்லி ராணி,
" ஆரடி தோழிகளே! அலங்காரச் செங்கமலம்!
வேட்டைக்கு நாம்போவோம், விரைந்தோடி வாரும்"
என்றாள்.
அப்போது செங்கமலம் அவசரமாய்ச் சென்றிட்டாள்;
குதிரையை அலங்கரித்துக் கொண்டுவந்து முன்புவிட்டாள்.
அல்லிப் பெருமாளும் அகமகிழ்ச்சி யோடெழுந்தே
அம்புவில்லும் கைப்பிடித்தாள்; அம்பறாத் தூணி
கொண்டாள்.

ஆனை குதிரைகளும் அணிவகுத்து நின்றனவே.
வெள்ளித் தமுக்கடித்தார்; வெண்கலக்கொம் பூதினார்;
பொன்தமுக்குத் தாமடித்தார்; புறப்பட்டார் பெண்க
ளெலாம்.

வில்லேந்தித் தோழிமார் விசையாய் நடக்கலுற்றார்.
ஆனைப் படைசூழ அல்லிராணி புறப்பட்டாள்.
குதிரைப் படைசூழக் குலமகளும் புறப்பட்டாள்.
பெண்கள் படைசூழப் பேரரசி புறப்பட்டாள்.
பாண்டியன் திருமகள் பரிமீது சென்றனளே.

பயிற்சி

1. 5-ஆம் பாடத்தை இப்படி உரைநடைப் படுத்து.

2. 10-ஆம் பாடத்தை வசனப்படுத்தி எழுது.

3. 15-ஆம் பாடச் செய்யுட்களை உரைநடைப் படுத்திக் கூறு.

4. 'அல்லிராணி வேட்டைக்குச் செல்லல்'—இப் பகுதியை மூன்று சிறு பிரிவுகளாக உரைநடைப்படுத்து.

5. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.

6. 'குடிகள் முறையிடல்'—இப் பகுதியை இரண்டு பிரிவு களாக வசனப்படுத்தி எழுது.

7. அவ்விரண்டு பிரிவுகளுக்கும் தலைப்புக் கொடு.

8. இந்த இரண்டு செய்யுள் பகுதிகளைக் கொண்டு அல்லி அரசியைப் பற்றி ஒரு கட்டுரை 12 வரிகளில் எழுது.

9. உரை நடைப் பகுதியில் எத்தனை வாக்கியங்கள் உள்ளன?

10. அவற்றில் உள்ள எ. ப. சே. கூறு.

11. அப்பகுதியில் உள்ள குறிகள் எவை? அவை எங்கெங்கு இடப்பட்டு இருக்கின்றன?

12. அப் பகுதியில் உள்ள பெயரெச்ச வினையெச்சங்களை எழுது.

25. பழமொழிகள்

புதிய சொற்கள்:—அடாது - படாது - அமுதம் - நஞ்சு - மிஞ்சினுல் - கன்னம் - நகரும் - ஆறின - கஞ்சி - ஆலை - இலுப்பை - செல் - அரிக்குமா - அள்ளாது - இறையாத - ஊருது - ஊர்க் குருவி - திண்டாட்டம் - கொண்டாட்டம் - கட்டெறும்பு - சுடு காடு.

1. அடாது செய்பவர் படாது படுவர்.
2. அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாம்.
3. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
4. அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா ?
5. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
6. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
7. ஆடு நனைகிறதென்று ஓநாய்க்குக் கவலை!
8. ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.
9. ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்க வேண்டாமா?
10. ஆத்திரக் காரனுக்கு அறிவு மட்டு.
11. இளங் கன்று பயம் அறியாது.
12. இரும்பைச் செல் அரிக்குமா ?
13. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.
14. இல்லாது பிறவாது ; அள்ளாது குறையாது.
15. இறைத்த கிணறு ஊறும்; இறையாத கிணறு ஊருது.
16. உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆனது.
17. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா ?
18. உலைவாயை மூடலாம் ; ஊர்வாயை மூடலாமா ?
19. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா ?
20. எச்சில் கையால் காகம் துரத்தமாட்டான்.

21. எலிக்குத் திண்டாட்டம்; பூனைக்குக் கொண்டாட்டம்.
22. எரிகிற தீயில் எண்ணெய் விடலாமா?
23. ஏறவிட்டு ஏணியை வாங்கலாமா?
24. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
25. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது.
26. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

கேள்விகள்

1. அ—வரிசைப் பழமொழிகள் எவை? அவற்றின் பொருள் என்ன?
2. ஆ ,, ,, ,,? ,, ,, ,,?
3. இ ,, ,, ,,? ,, ,, ,,?
4. உ ,, ,, ,,? ,, ,, ,,?
5. எ ,, ,, ,,? ,, ,, ,,?
6. ஏ, ஐ, க, தொ—இவற்றுடன் தொடங்கும் பழமொழிகள் எவை? பொருள் என்ன?
7. அமுதம் × நஞ்சு, இலை × பழுப்பு, இறைத்த × இறையாத, திண்டாட்டம் × கொண்டாட்டம்.

இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

8. ஆறின, அறிவு, இறைத்த, கன்னம்—இவற்றைக் கொண்ட பழமொழிகள் எழுது.
9. பழமொழி—என்பது என்ன?
10. உனக்குத் தெரிந்த வேறு பழமொழிகள் சொல்.
11. **சேர்த்து எழுது**:—அன்னம் + இட்ட, ஆலை + இல்லா, இளம் + கன்று, உளி + பிடி, ஊர் + குருவி, அடி + அடித்தால்.
12. **பிரித்து எழுது**:—அம்மியும், நஞ்சாம், அளவுக்கு, இரும்பை.

13. இப் பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கட்டம் இட்டு எழுதிக் காட்டு.

14. பெயரெச்ச—வினையெச்சங்களை எழுது.

15. ஒருமை—பன்மைப் பெயர்களைக் குறி.

16. ஐந்து பால் பெயர்களையும் கட்டம் இட்டு எழுது.

17. 1, 2, 3, 5, 11, 13, 15, 16, 18, 20, 25—இந்த எண் உள்ள பழமொழிகளில் இருக்கும் எ. ப. செ. கட்டம் இட்டு எழுது.

18. பொருத்தமான குறிகளை இடு :—
நீ எங்கே போனாய்
நான் கடைக்குப் போனேன்
அவள் நான் படிக்கிறேன் என்றாள்.

26. சாரணர் இயக்கம்

புதிய சொற்கள் :—இங்கிலாந்து - சர். இராபர்ட் பேடன் பவல்- சாரணர் - இயக்கம் - உட்பட்டவர் - அநுமதி - சட்டங்கள் - கற்பிக்கப்படும் - இயன்றவரை - கட்டுப்பட்டு - நிறைவேற்றுபவர் - உத்தம- கீழ்ப்படிந்து - ஒழுங்குபடுத்துவர்.

இங்கிலாந்தில் சர் இராபர்ட் பேடன் பவல் என்பவர் 1918-ஆம் ஆண்டில் சாரணர் இயக்கம் உண்டாக்கினர். சாரணர் என்பவர், பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் கூட்டத்தார். சிறு பிள்ளைகள் குட்டிச் சாரணர் என்றும், பெரிய பிள்ளைகள் பிள்ளைச் சாரணர் என்றும், வாலிபர் யுவ சாரணர் என்றும் கூறப்படுவர்.

பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர் குட்டிச் சாரணர்; அதற்கு மேற்பட்டவர் பிள்ளைச் சாரணரும் யுவ சாரணரு

ஆவர். நீங்கள் குட்டிச் சாரணர் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆதலால், உங்களுக்கு அவர்களைப்பற்றிச் சொன்னால் போதும் அல்லவா?

ஏழு முதல் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவரே இந்த இயக்கத்தில் சேர்வதற்கு உரியவர். அவர்கள் பெற்றோர் சம்மதம் இன்றி இந்த இயக்கத்தில் சேர்க்கப்பட

மாட்டார். சேர்க்கப்பட்ட மாணவரிடம் இரண்டு உறுதி மொழிகள் வாங்கப்படும்; இரண்டு சட்டங்கள் விளக்கப் படும். வந்தனம் செய்யும் முறையும் அதன் பொருளும் கற்பிக்கப்படும்.

வாக்குறுதிகள்: (1) 'நான் என்னால் இயன்றவரை கடவுளுக்கும் அரசருக்கும் என் கடமையைச் செய்வேன்; (2) குட்டிச் சாரணர் கூட்டத்துக்கு உரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, ஒவ்வொரு நாளும் பிறருக்கு உதவி செய்வேன்.'

விதிகள்: (1) 'குட்டிச் சாரணன் தன் தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். (2) தன்னைவிடப் பிறரையே அதிகமாகக் கவனித்தல் வேண்டும்.'

இந்த வாக்குறுதிகளையும் விதிகளையும் ஒழுங்காக நிறைவேற்றுபவரே உத்தமச் சாரணர். இவர்கள் இந்த இயக்கத்திற் பழகி, பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டதும் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து, பொது மக்களுக்குத் தொண்டு செய்வர்; தேர் திருவிழாக்களில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவர்; குழப்பத்தை அமைதிப்படுத்துவர்; ஆபத்தில் முதல் உதவி செய்வர்.

கேள்விகள்

1. சாரணர் இயக்கம் தோற்றுவித்தவர் யார்?
2. அவர் கண்ட மூன்று இயக்கங்கள் எவை?
3. குட்டிச் சாரணர்க்கு உரிய வாக்குறுதிகள் எவை?
4. அவர்களுக்கு உரிய விதிகள் எவை?
5. சாரணர் செய்யும் வேலைகள் எவை?

பயிற்சி

1. இயக்கம், அனுமதி, விதிகள், வாக்குறுதி, கீழ்ப்படிந்து—இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

2. 6-ஆம் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.

3. 4, 5-ஆம் பிரிவுகளில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கூறு.

4. 3-ஆம் பிரிவில் உள்ள வினைமுற்றுகள் எந்தக் காலத்தவை?

5. 1, 2-ஆம் பிரிவுகளில் உள்ள பெயரெச்ச—வினையெச்சங் களைக் கூறு.

6. இப்பாடத்திற்குக் குறிப்புகள் தயார் செய்.

7. தக்க குறிகளை இடு :—

அவன் உன் மாமன் மகனா
ஆம் அவன் என் மாமன் மகன்
நான் நேற்று நீ எங்கே போனாய் என்று கேட்டேன்
அவன் நான் நேற்றுக் கடைக்குப் போனேன் என்றான்

8. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) இவற்றை———உத்தமச்——— .
(2) சாரணர் குழப்பத்தை ———; ——— உதவி ——— .
(3) பன்னிரண்டு ——— உட்பட்டவர் ———ச் சாரணர்.

27. பத்திரிகைச் செய்திகள்

புதிய சொற்கள் :—பத்திரிகை - செய்தி - தாருல் இஸ்லாம் - வெளியிட்டவர் - குண்டுமணி - தோலா - சம்பந்தமாக - மதுராபுரி - முதியோர் - திறப்புவிழா - வேங்கடாசலபதி - சுப்பராமன் - பழனிச்சாமி - போன்றவற்றின் - கிராமப் பணி - முதியோர்.

‘அருமைப் பிள்ளைகளே, நீங்கள் தினந்தோறும் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். அவற்றுள் உங்களுக்குப் பிரியமானவையும் முக்கியமானவையும் ஆன செய்திகளைக் கத்தரித்து உங்கள் செய்தி - நோட்டுப் புத்தகத்

தில் ஒட்டி வைத்துக்கொள்ளுங்கள். அடுத்த வெள்ளிக் கிழமை உங்கள் செய்தி நோட்டுப் புத்தகத்தைக் கவனிப் பேன். நான் இனி வாரந்தோறும் வெள்ளிக்கிழமை அன்று உங்கள் நோட்டுப் புத்தகம் பார்ப்பேன்' என்று எங்கள் நான்காம் வகுப்பு ஆசிரியர் நேற்றுக் கூறினர்.

நாங்கள் 180 பக்கம் நோட்டுப் புத்தகம் ஒன்று வாங் கினேம்; தினமும் பத்திரிகை படித்து வருகிறோம்; முக்கிய மான செய்திகளைக் கத்தரித்து அந்த நோட்டுப் புத்தகத் தில் ஒட்டுகிறோம். அச்செய்திகளில் இரண்டை இங்குத் தருகிறோம்; நீங்கள் படித்துப் பார்த்து, அவை ஒட்டி வைக் கத் தக்கவையா என்பதைச் சொல்லுங்கள். கூடுமானல், நீங்களும் இம் முறையைப் பின்பற்றுங்கள்.

I

2-8-'40.

ரூபாயை முதலில் வெளியிட்டவர் யார்?

இந்தியாவில் முதன் முதல் வெள்ளி ரூபாய்களை வெளி யிட்டவர் 1539—1545 வரை இருந்த ஷேர்ஷா என்னும் சுல்தான் ஆவர். அப்போது அதன் கனம் 180 குண்டுமணி வெள்ளி ஆகும். இப்போது உள்ள ரூபாய் 1063 குண்டுமணி (அதாவது ஒரு தோலா) எடை உடையது.

இப்போது உள்ள அரை ரூபாய் நாணயத்தில் 12-ல் 11 பாகம் வெள்ளியும் 1 பாகம் வேறு உலோகமும் கலந் துள்ளன. இனிமேல் அரைப்பாகம் வெள்ளியும் அரைப்பாகம் கலப்பு உலோகமும் இருக்கும் எனத் தெரிகிறது. 4 அணு நாணயமும் இதே கலப்புத் திட்டப்படி இருக்கும். இது சம்பந்தமாகப் புதுச் சட்டம் வெளியிடப்படுகிறது.

—'தாருல் இஸ்லாம்'

II

மதுராபுரி முதியோர் பாடசாலை

சங்கரநயினர்கோவில், ஜூலை, 25-'40.

இப்பாடசாலைத் திறப்புவிழா நேற்று மாலை 5 மணிக்குச் சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி ஜில்லா போர்டு உபதலைவர் திருவாளர் **கோ. வேங்கடாசலபதி** அவர்கள் தலைமை வகித்துப் பேசினது வருமாறு:—

"இன்றைய கல்வி முறை உத்தியோகத்தைத் தேடுவதாக உள்ளது; வாழ்க்கைக்குத் தகுந்ததாக இல்லை. வாழ்க்கைக்கு ஏற்ற கல்வியைப் புகுத்துவதுதான் **'கிராமப் பாடசாலை'** போன்றவற்றின் நோக்கம் ஆகும். இதனைக் கிராமவாசிகள் கவனித்துப் பயனடைய வேண்டுகிறேன்."

அடுத்து, மதுரை நகரசபைத் தலைவர் திருவாளர் **சுப்பராமன்** அவர்கள் பாடசாலையைத் திறந்து வைத்துப் பேசினர்: "இந்தப் பாடசாலையைக் கிராமவாசிகள் பயன் படுத்தவேண்டும்; கிராமப் பணி செய்யவும் நன்ருய் உழைக்கவும் தம்மைப் பக்குவம் செய்துகொள்ள வேண்டும்."

அடுத்துப் பலர் பேசினர். எல்லோரும் முதியோர் கல்வியை வற்புறுத்திப் பேசி, அப் பாடசாலையில் உழைத்து வரும் திருவாளர் **பழனிச்சாமி**யைப் பாராட்டினர். கூட்டம் இரவு 9 மணிக்கு முடிந்தது.

—**'தினமணி'**

28. இராஜராஜ சோழன்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள்:—கரிகாலன்-இராஜராஜன்-இராஜேந்திரன்-புலிக் கொடி - பொறித்தவன் - பர்மா தேசம் - வென்றவன் - சிவபக்தன் - திருவையாற்றில் - ஓதுவார் - மானியம் - தேவாரம் - திருவாசகம் - நம்பியாண்டார் நம்பி - திருமுறைகள் - வைணவம் - பௌத்தம் - கௌரவித்தான் - தன்னுடையனவாக - செங்கோல்.

சோழ அரசர்களில் பெயர் பெற்றவர் **கரிகாலன், இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன்** முதலியோர். கரிகாலன் இமயமலைவரை படையெடுத்தவன்; இமயமலைமீது தன் புலிக் கொடியைப் பொறித்தவன். இராஜேந்திரன் இராஜராஜன் மகன். அவன் பர்மா தேசத்தின்மீதும் கடல் கடந்து படையெடுத்தவன்; கங்கைவரை வென்றவன்; 'கங்கை கொண்ட சோழன்' எனப் பெயர் பெற்றவன்.

இராஜராஜ சோழன் தஞ்சாவூரைத் தலைநகரமாகக்கொண்டு சோழ நாட்டை ஆண்டவன். அவன் சேரன், பாண்டியன் முதலிய தமிழ்நாட்டு வேந்தரையும் வடநாட்டு வேந்தரையும் வென்றவன். அவன் சிறந்த சிவ பக்தன். அவன்

தஞ்சாவூரில் **பெரிய கோவிலைக்** கட்டினன்; அவன் மனைவி திருவையாற்றில் சிவாலயம் ஒன்றைக் கட்டி முடித்தாள்.

இராஜராஜன் பெரிய கோவிலில் ஓதுவாரை நியமித்தான். தேவார—திருவாசகங்களைப் பாராயணம் செய்வதும் மாணவர்க்கு ஓதுவதும் அவர்கள் வேலை. அரசன் அவர்களுக்கு நிலங்களை மானியமாக விட்டான்; **நம்பியாண்டார் நம்பி** என்னும் சைவப் பெரியாரை அழைத்துக்கொண்டு சிதம்பரம் சென்முன்; அங்கு இருந்த தேவார ஏடுகளை



எடுப்பித்தான்; அவற்றை அப்பெரியவரைக் கொண்டு முறைப்படுத்தினன். அவர் அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்தார்.

இராஜராஜன் சிறந்த சிவ பக்தன் ஆயினும், வைணவம், பௌத்தம் முதலிய மதங்கள் மீதும் அன்பு காட்டி

ஞன் ; அந்த மதத்தாரைக் கௌரவித்தான் ; நாகப்பட்டினத்தில் பௌத்தர் ஆலயம் ஒன்றைக் கட்டினன்.

அவனது அரசாட்சியில் குடிகள் சுகமாக இருந்தனர்; சிறந்த முறையில் கல்வி பெற்றிருந்தனர் ; மதக் கொள்கைகளைப் பின்பற்றி வந்தனர். அரசன் குடிகள் மீது நியாயமான வரிகளையே விதித்தான் ; குடிகள் இன்ப துன்பங்களைத் தன்னுடையனவாகக் கருதினன். அவன் 'செங்கோல் அரசன்' என்று பாராட்டப்பட்டான்.

கேள்விகள்

1. சோழ அரசருள் சிறந்தவர் யாவர்?
2. கரிகாலன் வீரச் செயல்கள் எவை?
3. இராஜேந்திரன் வீரச் செயல்கள் எவை?
4. இராஜராஜன் செய்த தொண்டுகள் எவை?
5. அவன் செங்கோல் அரசன்.—எப்படி?
6. ஓதுவார்—மானியம் — தேவாரம்—சிதம்பரம்.— குறிப்பு எழுது.

பயிற்சி

1. நியாயம் × அநியாயம் } இவை எதிர்ப் பதங்கள்.
செங்கோல் × கொடுங்கோல் } இவற்றை உன் சொந்த வாக்
இன்பம் × துன்பம் கியங்களில் அமைத்துச் சொல்.

2. பொறித்தல், புலிக்கொடி, தேவாரம், கௌரவித்தல்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. முதல் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் கூறு.

4. முழுப் பாடத்திலும் உள்ள ஆறுவகைப் பெயர்ச் சொற்களையும் எழுது.

5. மூன்றும் பிரிவில் உள்ள எ. ப. செ. கூறு.

6. இரண்டாம்—மூன்றும் பிரிவுகளில் உள்ள ஐம்பால்களையும் சொல்.

7. கடைசிப் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை? அவற்றை இரண்டு இரண்டாகச் சேர்த்துக் கூறு.

8. இப்பாடத்தை இராஜராஜனே சொல்வதுபோலச் சொல்.

9. இப்பாடத்தை அவன் மனைவி „ „ „

10. இப்பாடத்தை இராஜேந்திரன் „ „ „

11. வரிகள், மனைவி, சோழன், கோவில், ஓதுவார்—என்ன பால்கள்?

12. இப் பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கட்டம் போட்டு எழுது.

13. இப் பாடத்தை மௌனமாகப் படி; படித்ததைச் சுருக்கி எழுது.

14. பிரிவுகளுக்குத் தலைப்புக் கொடு.

15. இப் பாடத்தைக் கட்டுரையாக எழுது.

16. உன் நண்பனுக்கு இராஜராஜ சோழனைப்பற்றி ஒரு கடிதம் எழுது.

17. இப் பாடச் செய்திகளை நிகழ்காலத்தில் கூறு; எழுது.

18. இப் பாடச் செய்திகளை எதிர் காலத்தில் கூறு; எழுது.

29. இளங்கோ அடிகள்

(நாடகம்)

புதிய சொற்கள்:—நெடுஞ் சேரலாதன் - செங்குட்டுவன் - இளங்கோ - அரசாட்சி - மாத்திரம் - எவ்வழி - அவ்வழி - அருளால் - சோதிடன் - வருந்துதல் - இருவரும் - இலக்ஷணம் - அமையப் பெற்றவர் - ஏற்றதாகும் - குசுகுசு - கேட்டிருக்கிறாயா - அவரினும் - கோலத்தில் - துறவி - சந்நியாசி - தமையனார் - வணக்கம் - பாக்கியசாலி - அடிகள்.

[நெடுஞ் சேரலாதன் சேரநாட்டு மன்னன். அவன் இருபுறமும் செங்குட்டுவன், இளங்கோ என்னும் இரண்டு குமாரரும் ஆசனத்தில் அமர்ந்து இருக்கின்றனர். அமைச்சர் முதலியோர் இராஜ சபையில் இருக்கின்றனர்.]

அரசன் :—அமைச்சர்களே, நமது நாட்டுக் குடிகளுக்கு நம்மீது ஏதேனும் குறை உண்டா?

அமைச்சர்கள் :—அரசே, வணக்கம். தங்கள் அரசாட்சி செங்கோல் அரசாட்சி அல்லவா! அதில் குறை ஏது?

அரசன் :—ஐயன்மீர்! எல்லாம் உங்கள் பெருமையே. உங்கள் உதவி இல்லாமல் நான் மாத்திரம் என்ன செய்யக் கூடும்? குடிகளுக்கு வேண்டும் நன்மைகளைத் தெரிந்து செய்பவர் நீங்கள் அல்லவா?

அமைச்சர் :—அரசே, வாழ்க! எல்லாம் இறைவன் செயல். 'அரசன் எவ்வழி - அவ்வழிக் குடிகள்.' தாங்கள் சிறந்த பக்திமான்; நிறைந்த குணம் உடையவர்கள். ஆதலால், தங்கள் குடிகள் தங்களிடம் பயபக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். எல்லோரும் கடவுள் அருளால் சுகமாகவே வாழ்கிறார்கள். குறை ஒன்றும் இல்லை.

(அச்சமயத்தில் சோதிடன் ஒருவன் உள்ளே வருகிறான்.)

சோதிடன் :—அரசே, வாழ்க! (வணங்குகிறான்)

அரசன் :—ஐயா, நீர் யார்?

சோதிடன் :—நான் சோழ நாட்டுச் சோதிடன். இந்த நாட்டையும் தங்களையும் கண்டு போக வந்தேன்.

(அரச குமாரர்களை உற்று நோக்குதல்)

சோதிடன் :—அரசே, வாழ்க! யான் சொல்வதைப் பற்றி வருந்துதல் ஆகாது. உம்முடைய புதல்வர் இருவருள், இளையவரே அரச இலக்ஷணங்கள் எல்லாம் அமையப் பெற்றவர். மூத்தவரிடம் அத்தனை இலக்ஷணங்கள் இல்லை. ஆதலால் உமக்குப் பின் இளையவர் பட்டத்துக்கு வருதலே ஏற்றதாகும்.

(செங்குட்டுவன் கோபத்துடன் காண்கிறான்; இளங்கோவின் முகம் சிவக்கிறது; அரசன் தன் மக்களை வருத்தத்தோடு மாறி மாறிப் பார்க்கிறான்; சபையோர் குசுகுசு என்றுபேசுகின்றனர்.)

இளங்கோ :—அடா, சோதிடனே! என்ன சொன்னாய்? நீ, எந்த நாட்டிலேனும் மூத்தவன் இருக்க - இளையவன் பட்டம் அடைதல் உண்டு என்பதைக் கேட்டிருக்கிறாயா? என்ன கேடு! இது எவ்வளவு கேவலமானது! என் தமையனார் வீரர்; அரசரது மூத்த குமாரர்; அவர் இருக்கும் பொழுது, அவரினும் சிறிய நானா பட்டத்தை அடைவது? சோதிடா, உன் சோதிடம் நன்று!

சோதிடன் :—இளவரசே, வாழ்க! நான் அறிந்ததைச் சொன்னேன். என்மீது கோபிக்க வேண்டாம்.

(இளங்கோ உள் சென்று துறவி வேடத்தில் வந்து)

இளங்கோ :—சோதிடனே, போதும், வாயை மூடு. நான் இந்தக் கோலத்தில் இருப்பதால் அல்லவா நீ இவ்வாறு சொன்னாய்! உன் பேச்சு நாடு முழுவதும் பரவினால், அதனால் கெடுதல் உண்டாகும். நான் இந்த நிமிடம் முதலே சந்நியாசி ஆவேன்! 'ஆனேன்' என்று கொள்.

என் தமையனுக்காக நான் துறவி ஆனேன். இனி என்னை உன் சோதிடம் என்ன செய்யும்? நான் என் வாழ்நாள் முழுவதும் துறவியாகவே இருப்பேன்; என் அருமைத் தமையனரே சேர அரசர் ஆவர். நான் அவருடனேயே இருப்பேன். இது சத்தியம்.

அரசன் :—ஆ! மகனே! அவசரப்படாதே!

(மகனைப் பிடித்தல்)

இளங்கோ :—அப்பா, வணக்கம். நான் சொன்னது சொன்னதே. என்னை மன்னிக்கவும்.

செங்குட்டுவன் :—(தம்பியை மார்போடு அணைத்து) தம்பீ, உன்னைத் தம்பியாகப் பெற்ற நான் பாக்கியசாலி. நீ எப்பொழுதும் என்னுடன் இருந்து இன்பம் அளிப்பாயாக.

இளங்கோ :—அண்ணா, அப்படியே செய்வேன்.

சபையார் :—இளங்கோ அடிகள் வாழ்க! இளங்கோ அடிகள் வாழ்க!! இளங்கோ அடிகள் வாழ்க!!!

கேள்விகள்

1. இளங்கோ ஏன் துறவி ஆனார்?
2. அடிகள்—பொருள் யாது?
3. இளங்கோவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
4. செங்குட்டுவனைப்பற்றி உன் கருத்து என்ன?

பயிற்சி

1. நீ செங்குட்டுவனாக இருந்து இக்கதையைச் சொல்.
2. நீ இளங்கோவாக ,, ,, ,,
3. நீ அரசனாக ,, ,, ,,
4. நீ சோதிடனாக ,, ,, ,,
5. நீ அமைச்சனாக ,, ,, ,,

6. இக் கதையை ஒரு கட்டுரையாக எழுது.

7. அரசன் நீதி—சோதிடன் சொன்னது—இளங்கோவின் பேச்சு—துறவி ஆதல்—முடிவு: இக் குறிப்புக்களைக் கொண்டு இக் கதையை 5 பிரிவுகளில் எழுது.

8. மாத்திரம், இலக்ஷணம், ஏற்றது, குசுகுசு, துறவி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

9. துறவி—சந்நியாசி, கோலம்—வேஷம், தமையன்—அண்ணன் } ஒரே பொருளில் வந்துள்ள இரண்டு சொற்கள்.

இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

10. சோதிடன் இளங்கோவைப்பற்றிச் சொன்ன வாக்கியங்களில் உள்ள வினைமுற்றுகளின் காலம் என்ன?

11. இளங்கோ இரண்டாம் முறையாகச் சோதிடனைப் பார்த்துப் பேசிய வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கூறு.

12. அதே வாக்கியங்களில் உள்ள வினையெச்சம் பெயரெச்சங்களைக் கூறு.

13. இப் பாடத்தில் வந்துள்ள ஐம்பால்களையும் கட்டம் போட்டுக் காட்டு.

14. இப் பாடத்தில் வந்துள்ள ஒருமை—பன்மைகளை எழுது.

15. இதில் வந்துள்ள ஆறுவகைப் பெயர்ச் சொற்களையும் கூறு.

30. செய்யுள் பாடம்

1. வாக்குண்டாம்

(நல்லோர் நன்றி மறவார்)

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1.

(நல்லார்—அல்லார்)

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே ;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2.

(நல்லார் சிறப்பு)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 3.

(படியாதவன் மரம்)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவைஅல்ல நல்ல மரங்கள் ;—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 4.

(அரசனும் படித்தவனும்)

மன்னனும் மாசறக் கற்றேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றேன் சிறப்புடையன் ;—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு. 5.

—ஔவையார்

அரும் பொருள் :—(1) நன்றி - உதவி, தருங்கொல் - பதில் உதவி செய்வார், வேண்டா - நினைக்கவேண்டா, தளரா - சோர்வடையாமல், தெங்கு - தென்னைமரம், தலையாலே - உச்சியில், (இளநீராக). (2) ஈரம் - இரக்கம், ஈந்த - செய்த. (3) நலம் - நன்மை, இணங்கி - சேர்ந்து. (4) கவை - பிளவு (கிளை விட்டு). (5) மாசற - குற்றம் நீங்க.

2. நல்வழி

(சாதிகள் இரண்டே)

சாதி இரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. 1.

(நல்ல குடிப்பிறந்தார்)

ஆற்றுப் பெறுக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து. 2.

(நிலையில்லாத வாழ்வு)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ ? மாநிலத்தீர் !—வேண்டா ;

நமக்கும் அதுவழியே ; நாம்போம் அளவும்
எமக்கென்என் றிட்டுண் டிரும். 3.

(உழவின் உயர்வு)

ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ;—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை ; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 4.

(செலவாளி சீர்கெடுவான்)

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏற்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 5.

—ஔவையார்

அரும் பொருள் :—(1) சாற்றுங்கால் - சொல்லும் இடத்து, மேதினி - உலகம், பட்டாங்கு - சாத்திரம். (2) அவ்வாறு - அந்த ஆறு, உலகு - உலகத்து உயிர்களை, நல்கூர்ந்தார் - ஏழையானோர், இசைந்து - மனம் வந்து. (3) என்று இட்டு உண்டு இரும். (4) ஏற்றம் - உயர்வு, பழுது - குற்றம். (5) நாடு - ஆராய்ந்து பார்.

3. விவேக சிந்தாமணி

(பயன் இல்லாதவை)

ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக் குதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,

கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம்—
பயனில்லை ஏழுந் தானே. 1.

(உபசரிப்பு)

ஒப்புடன் முகம்ம லர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமுதம் ஆகும்;
முப்பழ மொடுபால் அன்னம் முகம்கடுத் திடுவர் ஆயின்,
கப்பிய பசியி னேடு கடும்பசி ஆகுந் தானே. 2.

(புத்திமானே பலவான்)

புத்திமான் பலவான் ஆவான்; பலமுளான் புத்தி அற்ருல்
எத்தனை விதத்தி ஞலும் இடரது வந்தே தீரும்;
மற்ரெரு சிங்கம் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றின் சாயல் காட்டிய
உவமை போலே. 3.

கருதியநூல் கல்லாதான் மூடன் ஆவான்.
கணக்கறிந்து பேசாதான் கசடன் ஆவான்.
ஒருதொழிலும் இல்லாதான் முகடி ஆவான்.
ஒன்றுக்கும் உதவாதான் சோம்பன் ஆவான்.
பெரியவர்கள் முன்னின்று மரத்தைப் போலப்
பேசாமல் இருப்பவனே பேயன் ஆவான்.
பரிவுசொல்லித் தழுவினவன் பசப்பன் ஆவான்.
பசிப்பவருக் கிட்டுண்ணுன் பாவி ஆமே.

அரும் பொருள்:—(1) தாபம் - வெப்பம், தீரா - நீங்காத. (2) முப்பழம் - மா, பலா, வாழை; கப்பிய - மிகுந்த. (3) இடர் - துன்பம், உற்ற - பொருந்திய. (4) பரிவு - அன்பான வார்த்தை.

II. சதகச் செய்யுள்

(1) அறப்பளீசுர சதகம்

(கோபத்தின் கொடுமை)

கோபமே பாவங்க ளுக்கெலாம் தாய்தந்தை;
    கோபமே குடிகெடுக்கும்;
கோபமே ஒன்றையும் கூடிவர ஒட்டாது;
    கோபமே துயர்கொடுக்கும்;
கோபமே பொல்லாது; கோபமே சீர்கேடு;
    கோபமே கருணைபோக்கும்;
கோபமே ஈனமாம்; கோபமே எவரையும்
    கூடாமல் ஒருவனுக்கும்;
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
    கக்குழியி னில்தள்ளுமால்;
ஆபத் தெலாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
    அண்ணலே! அருமை மதவேள்!
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
    அறப்பளீ சுரதேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

மறலி—யமன், சதுரகிரி—கொல்லி மலை.

(2) தண்டலையார் சதகம்

(நல்ல பிள்ளை)

நன்றிதரு பிள்ளைஒன்று பெற்றாலும்
    குலமுழுதும் நன்மை உண்டாம்;
அன்றிஅறி வில்லாத பிள்ளைஒரு
    நூறுபெற்றும் ஆவ துண்டோ?

மன்றில்நடம் புரிவாரே ! தண்டலையா
 ரே!சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன ? குஞ்சரமொன்(று)
 ஈன்றதனுல் பயனுண் டாமே.

—படிக்காசுப் புலவர்

மன்று—சபை, குஞ்சரம்—யானை.

(3) குமரேசர் சதகம்

(சிறுமையில் பெருமை)

சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது
 திருமுடியின் மேலிருக்கும் ;
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத் தரசரது
 தேகத்தின் மேலிருக்கும் ;
போற்றியிடு பூச்சியின் வாயினுல் பட்டென்று
 பூசைக்கு நேசம்ஆகும் ;
புகலரிய வண்டெச்சில் ஆனதேன் தேவர்கொள்
 புனிதஅபி டேகமாகும் ;
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
 சவாதுபுழு கனைவர்க்குமாம் ;
சாதிஈ னத்தில் பிறக்கினும் கற்ருேர்கள்
 சபையின்மேல் வட்டம்அன்ருே ?
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
 வைத்தமெய்ஞ் ஞானமுதலே !
மயிலேறு விளையாடும் குகனே !புல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே !

—குருபாத தாசர்

அரும் பொருள்:—சனித்த - உண்டான ; மேல்வட்டம் - மேடை. விபூதியால் சுரத்தினை மாற்றியது - சம்பந்தர் கூன்பாண்டியன் வெப்பு நோயை நீக்கினது.

III. பலசுவைப் பாடல்கள்

(1) வெற்றிவேற்கை

(பனைமரம்)

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே. 1.

(ஆலமரம்)

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே. 2.

அரும்பொருள்:—(1) தேம்படு - மதுரம் பொருந்திய, திரள்-திரண்ட, வான்-ஆகாயம். (2) தெள்நீர் கயம்-தெளிந்த நீரையுடைய குளம், சினை- முட்டை, நுண்ணிது - நுட்பமானது, அண்ணல்-பெருமை, அணி-அலங்கரிக்கப்பட்ட.

(2) பஞ்சக் கொடுமை

பாண்டிய நாட்டார் பரதேசம் போகிறார்கள் :
மழைபெய்வ தில்லை மதுரைநகர்ச் சீமையிலே.
தூரல் கிடையாது தொன்மதுரைப் பூமியிலே.
காய்ந்துலர்ந்து கருகினவே கனமதுரைப் பட்டணத்தில் ;
எரிந்து புகைந்தனவே ஈரங் கிடையாமல்.
குடிக்கநீர் கிடையாது குளங்கள் மடுக்களிலும்.

காகம் குடிப்பதற்கும் கரண்டிநீர் இல்லை அம்மா!
ஆறு குளங்களெலாம் அறவே வறண்டனவே.
ஏரி வறண்டனவே ஏற்றக்கோல் ஆழமட்டும்.
விளைவுகள் இல்லையடி வேந்தன் மதுரையிலே.
சருகுபோல் உலர்ந்தனவே தழைத்த மரங்களெலாம்.
தங்க நிழல்இல்லை தனிமதுரை மாநகரில்.
அன்னம் கிடையாது அழகான மதுரையிலே.
சரீரம் வெளுத்தார்கள் சல்லடைக்கண் ஆனார்கள்.
மனைவிமக்க ளோடே மதிமயங்கிப் போனார்கள்.

—அல்லி அரசி மாலை.

௫